விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: எட்டு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 சித்திரை 21 வியாழக்கிழமை (04.05.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 136

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## இன்று யாழ்.குடாநாடு தழுவிய பூரண ஹர்த்தாலுக்கு அழைப்பு


### யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் அண்மைக் காலமாக இராணுவத்தினராலும், அதனுடன் சேர்ந்தியங்கும் ஒட்டுக்குழுக்களாலும் தொடர்ச்சியாக அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டு வருகின்றனர்.

இதன் உச்சக்கட்டமாக நேற்று முன் தினம் இரவு உதயன் பத்திரிகை நிறுவனத்துக்குள் அத்துமீறி நுழைந்த ஒட்டுக்குழுவினர் மிகவும் கோரத்தனமாக மேற்கொண்ட படுகொலைச் சம்பவத்தைக் கண்டித்து பூரண ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கின்றோம்.

இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்து. அதில் எமது இனத்தின் மீதான படுகொலைகளை வெளியுலகத்திற்கு தெரியப்படுத்தும் முகமாகவும் இப்படுகொலை சம்பவத்துடன் சம்பந்தப்பட்ட ஒட்டுக்குழுவினரை உடனடியாகக் கைதுசெய்து சட்டத்தின் முன் நிறு[illegible]வதுடன் அப்பாவி மக்களையும், ஊ[illegible]வியலாளர்கள், மாணவர்கள் மீதான வன்முறைகள் உடன் நிறுத்தப் பட வேண்டும் என கோரி நிற்பதுடன் இதற்கு சர்வதேச சமூகமும், சர்வதேச ஊடகங்களும் இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என வேண்டிக் கொள்கின்றோம் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரு)



உதயன் பணிமனையை தாக்கியவர்கள் மீது படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தினால் அவர்கள் விட்டுச் சென்றதாக பொலிஸாரால் தெரிவிக்கப்பட்ட ஆயுதத்தை படத்தில் காண்கிறீர்கள்.

### உதயன் தாக்குதல் குற்றப்புலனாய்வு பிரிவு விசாரணை

(யாழ்ப்பாணம்)

உதயன் பணிமனை மீதான தாக்குதல் தொடர்பான விசாரணைகளை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் சந்திரா (08ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சுக்கு இருதரப்பும் செல்லவேண்டும்

# இந்தியா கண்டிப்பான உத்தரவு!

## ஜெனீவா சந்திப்பு மிக விரைவில் நடக்குமாம்

## கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரபரப்பு

(கொழும்பு)

**அரசும் விடுதலைப்புலிகளும் ஜெனீவாப் பேச்சுவார்த்தையை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும். இவ்வாறு இந்தியா கண்டிப்பான உத்தரவை பிறப்பித்துள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரவலாக பேசப்படுகின்றது.**

இலங்கையில் அண்மைக்காலமாக இடம் பெற்றுவரும் சம்பவங்கள் சமாதான சூழ்நிலைக்கு பாதகமாக உள்ளதெனக் கருதும் இந்திய அரசு அதுவிடயத்தில் அதீத அக்கறை கொண்டுள்ளதாகவும் ஜெனீவாவில் இடம்பெறும் இரண்டாம் சுற்றுப்பேச்சுவார்த்தையை அரசும் விடுதலைப்புலிகளும் உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் எனவும் கூறியுள்ளதாக தெரிய வருகின்றது.

அரசும் விடுதலைப்புலிகளும் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளாவிட்டால் இலங்கை இனவிவகாரத்தில் இந்தியா நேரடியாகத் தலையிடும் எனவும்,

இந்தத் தலையீடு எவ்வகையில் அமையும் என்பதை யார் பேச்சுவார்த்தைக்கு செல்ல மறுக்கிறார்களோ அதனைப் பொறுத்தேதீர்மானிக்கப்படும் எனவும் இந்திய அரசு இரு தரப்பிடமும் கூறியுள்ளதாகவும் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

இது ஒரு புறம் (08ஆம் பக்கம் பார்க்க)

### இருதரப்பையும் பேசவைக்க பௌயர் இலங்கை வருவார்

இலங்கையில் சிக்கலான நிலை தோன்றியுள்ள நிலையில் அரசாங்கத்தையும் விடுதலைப்புலிகளையும் ஜெனீவாப் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவர நோர்வே அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது என நோர்வே சிறப்பு சமாதானத் தூதுவர் ஹான்சன் பௌயர் தெரிவித்துள்ளார்.

இரு தரப்பினரையும் ஜெனீவா மேசைக்குக் கொண்டுவர விரைவில் இலங்கைக்குச் செல்லவுள்ளதாகவும், தற்போது கிழக்குத் தளபதிகளின் போக்குவரத்துக்குறித்து பேசப்படுவதாகவும் அதில் நோர்வேயின் கவனம் திரும்பியுள்ளதாகவும் பௌயர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்குச் சென்று இரு தரப்பினரையும் சந்தித்துப் பேசி இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே ஜெனீவாப்பேச்சுக்கான திகதியை அறிவிக்கலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரு-05)

## புலிகளுக்கு கடல் விமானம் வழங்குவது அரசாங்கத்தின் சித்த சுவாதீனமற்ற செயல்

### எதிர்ப்போம் என்கிறது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்

(கொழும்பு)

கிழக்கில் இருந்து வன்னிக்கு வருவதற்கு விடுதலைப்புலிகளுக்கு கடல் விமான வசதிகளை அரசாங்கம் வழங்க முன்வந்திருப்பதை கடுமையாக எதிர்த்துள்ள தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் இதனை செயற்படுத்தினால் புலிகளுக்கு எதிராக மட்டுமல்லாமல் அரசாங்கத்திற்கு எதிராகவும் போராட்டங்கள் மேற்கொள்ள நேரிடும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்திருப்பதாவது,

இரண்டாம் கட்ட ஜெனீவாப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படவிருந்த தருணத்திலேயே கிழக்கில் இருந்து தமது உறுப்பினர்களை வன்னிக்கு அழைப்பதற்குரிய வசதிகளை அரசாங்கம் வழங்க வேண்டுமென்று புலிகள் வலியுறுத்தத் தொடங்கியதோடு அதற்காக அரசு முன்வைத்த பல யோசனைகளை நிராகரித்தது.

அதுமட்டுமல்லாது படைகள் மற்றும் மக்கள் மீதான புலிகளின் தாக்குதல்கள் அதிகரிக்கப்பட்டதோடு இராணுவத்தளபதியை கொலை செய்யும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது.

இந் நிலையில் புலிகளின் தேவைக்காக கடல் விமானம் வழங்க அரசு முயற்சிப்பது சித்த சுவாதீனமற்ற நிலையிலா என்ற கேள்வி எம் முன் தோன்றியுள்ளது.

அரச படைகள் பொதுமக்கள் மீதான தாக்குதலை நிறுத்துவதாக புலிகள் தெளிவான உறுதி மொழியை வழங்கிய பின்னரே அவர்களது வன்னிப்பயணத்திற்கான விமான வசதி வழங்குவது தொடர்பாக அரசாங்கம் சிந்தித்திருக்க வேண்டும்.

புலிகளை மீண்டும் பேச்சுவார்த்தை என்ற பெயரில் ஜெனீவா கொண்டு சென்று அவர்களது கறைகளைக்கழுவி சர்வதேச ரீதியில் நற்பெயரைப் (08ஆம் பக்கம் பார்க்க)

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஊரெழு சி.சி.த.க.பாடசாலை இயக்கப் படாதது ஏன்?

(கோப்பாய்)

ஊரெழு சி.சி.த.க. பாடசாலை மீள நிர்மாணித்து ஆரம்பிக்கப் பொருத்தமான நடவடிக்கைகள் எதுவும் இதுவரை மேற்கொள் எப்படவில்லை என இப் பகுதி வாழ் சமூக அமைப்புகள் கல்வி ஆர்வலர்கள் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

ரிவிரெச இராணுவ நடவடிக் கைக்கு முன்பாக நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்களுடன் இயங் கிய இப் பாடசாலை மேற்படி நட வடிக்கையில் முற்றாகச் சேதம டைந்ததைத் தொடர்ந்து பத்து வருடங்களுக்கு மேலாக இற்றை வரை அண்மையிலுள்ள கணேச வித்தியாலயத்துடன் இணைந்து நடாத்தப்பட்டு வருகின்றது ஆயின் பெருமளவிலான பெறுமதியான நிலப்பரப்புடன் கூடிய இக் காணி யில் புதிய பாடசாலைக் கட்டடத்தை நிர்மானிக்க மாகாண கல்வித் திணைக்களமோ அன்றி பாராளு மன்ற உறுப்பினர்களோ அரச சார்பற்ற நிறுவனங்களோ ஆக்க பூர்வமாக நடவடிக்கை எதையும் இதுவரை மேற்கொள்ளவில்லை என மேலும் தெரிவிக்கப்படுகின் றது. இதேபோன்று கோப்பாய்க் கல்விக் கோட்டத்துக்குட்பட்ட மூன்று பாடசாலைகள் கடந்த பத்து வரு டங்களாக மூடப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. (து-79)

# க.பொ.த.உயர்தரப் பரீட்சையை நடத்துவதற்கான ஏற்பாடுகள் பூர்த்தி

(கொழும்பு)

இவ்வாண்டுக்கான க.பொ.த உயர்தரப்பரீட்சையை உரிய முறை யில் நடத்துவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ள தாக பரீட்சைத்திணைக்களம் தெரி வித்துள்ளது.

பரீட்சைக்கு தோற்றும் மாண வர்களுக்கான அனுமதிப்பத்திரங் கள் அடுத்த வாரம் அஞ்சலில் சேர்க் கப்படுமென்றுபரீட்சைகள் ஆணை யாளர் நாயகம் அநுர எதிரிசிங்க கூறினார்.

க.பொ.த.உயர்தரப் பரீட்சை எதிர்வரும் 22ஆம் திகதி ஆரம்ப மாகி அடுத்த மாதம் 15ஆம் திகதி முடிவடையும். இம்முறை ஆயி ரத்து 811 நிலையங்களில் உயர் தரப் பரீட்சை நடைபெறவுள்ளது.

பரீட்சார்த்திகள் 2 இலட்சத்து 45 ஆயிரத்து 694 பேர் தோற்று கிறார்கள். இவர்கள் தேசிய அடை யாள அட்டையை சமர்ப்பித்து தத்தமது அடையாளத்தை உறுதி செய்வது அவசியமானதாகும். தேசிய அடையாள அட்டையைத் தவிர்ந்த வேறு எந்த ஆவணங்களும் செல்லுபடியற்றது.

எனவே ஆட்பதிவுத் திணைக் களத்தினூடாக தேசிய அடையாள அட்டைகளை விரைவில் பெற றுக்கொடுக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (க-7)

# ஊடகவியலாளர்கள் மீது அமைச்சர் மங்கள பாய்ச்சல்

(கொழும்பு)

ஊடகவியலாளர்கள் சிலர் பொறுப்பற்ற தன்மையுடன் தனிப் பட்ட விருப்பு, வெறுப்பின் அடிப் படையில் செயற்பட்டுவருகின்றனர்.

பயங்கரவாத அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் இலங்கை போன்ற நாடுகள் இத்தகைய பொறுப்பற்ற ஊடகவியலாளர்களின் செயற் பாடுகளால் தொடர்ந்தும் நெருக் கடிகளை எதிர்நோக்குகின்றன.

என்று வெளிவிவகாரத்துறை முக அபிவிருத்தி, விமான சேவை சேவைகள் அமைச்சர் மங்கள சமரவீர குற்றஞ்சாட்டியுள்ளார்.

உலக ஊடக சுதந்திர தினத்தை யொட்டியஆரம்பவைபவம்கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

இவ் வைபவத்தில் கௌரவ அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச் சர் மங்கள சமரவீர மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

தகவல், ஊடகத்துறை அமைச் சர் அநுர பிரியதர்ஷன யாப்பா பிர தம அதிதியாகக் கலந்து கொண்ட இவ் வைபவத்தில் அமைச்சர் மங் கள சமரவீர தொடர்ந்தும் உரை யாற்றுகையில்,

உலக ஊடக சுதந்திரதின வைப வங்களை இம்முறை இலங்கை யில் கொண்டாடுவதற்கு யுனெ ஸ்கோ நிறுவனம் எடுத்த முடிவை நாம் பெரிதும் வரவேற்றுப்பாராட் டுகிறோம். இவ் வைபவங்களை சிறந்த முறையில் மேற் கொள் வதற்குத்தேவையான ஒழுங்குகளை அரசாங்கம் செய்துள்ளது.

இதற்காக தகவல், ஊடகத் துறை அமைச்சரைப் பாராட்டு கிறேன். இம்முறை உலக ஊடக சுதந்திர தினத்தின் தொனிப் பொருள் ஊடகம் மற்றும் அபிவி ருத்தியும், வறுமை ஒழிப்பும் என் பதாகும். இத் தொனிப் பொருள் இலங்கைக்கு மிகவும் பயன்மிக் கதும் முக்கியத்துவமானது மாகும். மஹிந்த சிந்தனையில் வறுமை ஒழிப்புக்கும், அபிவிருத்திக்கும் முக்கிய இடமளிக்கப்பட்டிருக் கிறது.

இத்திட்டத்திற்கு நாட்டுமக்கள் ஐந்து மாதங்களுக்கு முன்னர் அங்கீகாரம் அளித்திருக்கின்றனர். அந்த வகையில் வறுமை ஒழிப் பின் ஊடாகவே நாட்டில் அபிவி ருத்தியை ஏற்படுத்த முடியும் இதனை எமது அரசாங்கம் ஏற் றுக்கொண்டிருக்கிறது.

1948ஆம் ஆண்டில் இலங்கை சுதந்திரமடைந்து அன்றைய கால கட்டம் முதல் இந்நாட்டில் ஊடகங் கள் சுதந்திரமாக இயங்கி வரு கின்றன. என்றாலும் ஒரிரு வரு டங்களில் இந்த ஊடக சுதந்திரம் பாதிக்கப்பட்டிருப்பதையும் நாம் மறுத்துவிடவில்லை.

1994ஆம் ஆண்டின் பின்னர் இந்நாட்டின் ஊடகத்துறையும் அதன் சுதந்திரமும் பாரியளவில் வளர்ச்சியடைந்தன. இவ்வளர்ச்சி அச்சு மற்றும் இலத்திரனியல் துறைகளில் ஏற்பட்டிருக்கின்றது. இதன் விளைவாக இந்நாட்டில் ஊடகவியல்துறை ஒரு வலுவான சக்தியாக விளங்குகிறது.

இலங்கை ஊடகத்துறை மிக விரைவில் முழு உலகிற்கு ஒரு முன் மாதிரி மிக்கதாக மாறும் என நம் புகிறேன். ஊடகச் சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் விடயத்தில் அர சாங்கமும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறது.

இருந்தும் சில தனியார் ஊட கங்கள் தனிப்பட்ட விருப்பு, வெறுப் புகளுடனும் மறைமுக நோக்கங் களுடனும் செயற்பட்டுவருகின்றன. இதனால் உண்மைகள் உள்ள படியே மக்களைச் சென்றடைவது பாதிக்கப்படுகிறது.

ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், மக்க ளைப் பாதுகாக்கவும் வேண்டிய பொறுப்பு ஊடகங்களுக்கு உள் ளது. இவற்றைக் கருத்திற் கொண்டு ஊடகங்கள் நடுநிலையாகவும், பக்கச்சார்பற்ற முறையிலும் செயற் படுவது காலத்தின் அவசியத் தேவை யாகும் என்றார்.

இவ் வைபத்தில் பிரதியமைச் சர் எம்.எச்.சேகுஇஸ்ஸதீன், யுனெ ஸ்கோ நிறுவன தொடர்பாடல் தொடர்பான பிரதி உதவி செயலா ளர் நாயகம் மோகன்ஸ் ஸ்மித்த தகவல் ஊடக அமைச்சின் செய லாளர் டபிள்யூ. பி.கனேகல, வெளி விவகார அமைச்சின் செயலாளர் பலிகக்கார மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு ஊடகவியலாளர் களும் கலந்துகொண்டார். (க-7)

# 3 மாதங்களில் ஒரு இலட்சம் கடவுச்சீட்டுக்கள் விநியோகம்

(கொழும்பு)

இவ்வாண்டின் முதல் மூன்று மாதங்களில் மட்டும் சுமார் ஒரு லட்சம் கடவுச் சீட்டுக்களை வழங் கியிருப்பதாக குடிவரவு குடியகல் வுத் திணைக்களம் தெரிவித்துள் ளது.

இதன் மூலம் 32கோடிரூபா வருமானம் கிடைத்ததாக குடிவரவு குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் பி.பி.அபயக்கோன் கூறினார்.

கடவுச்சீட்டு செல்லுபடியாகும் காலப்பகுதியை பத்து வருடங் கள்வரை நீடித்ததாலேயே மக் கள் அவற்றைப் பெறுவதில் ஆர் வம் காட்டுகிறார்கள்.

இதேவேளை, கொழும்பு வரா மல் சம்பந்தப்பட்ட பிரதேச செய ல கங்களுக்கூடாக கடவுச்சீட்டுக்கோரி விண்ணப்பிக்க முடியுமெனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (க-7)

# இராசி பலன்

**04.05.2006**
**(சித்திரை 21, வியாழக்கிழமை)**
**சப்தமி பின்னிரவு 12.29 மணிவரை**
**பு,சம் பின்னிரவு 5.13 மணிவரை**
**இராகுகாலம் 1.26-2.56மணிவரை**
**சுபநேரம் 7.26-8.56 மணிவரை**
**அமிர்சித்தம்**

| | |
|---|---|
| மேடம் | மனச்சஞ்சலம், காரிய தாமதம், சுப செலவு, மாதாசுகம். |
| இடபம் | மனோதைரியம், இனிய சம்பவம், அன்னி யர் சந்திப்பு, உறவினர் வருகை. |
| மிதுனம் | போசன சுகக்குறைவு, கோபப்படுதல், பெரியோரால் நன்மை, முயற்சி தாமதம். |
| கடகம் | தெய்வசிந்தை, மாதர்நாட்பு, முயற்சி பலிதம், தொழில்சிந்தை. |
| சிங்கம் | சித்தனை மிகுதி, சுபகாரியச் செலவு, இடமாற்றம், நித்திரைக்குறைவு. |
| கன்னி | ஆனந்தம், மாதர் நட்பு, சயனசுகம், பிறர் உதவி. |
| துலாம் | எடுத்த காரியம் கைகூடும், தொழில் நன்மை, நல்ல வரவேற்பு, போசனசுகம். |
| விருச்சிகம் | பொருள் விரயம், உத்தியோக பலிதம், கட்டுப்பாடு, முயற்சி தாமதம். |
| தனுசு | மனக்கவலை, பொருள் விரயம், அஜீரண சேர்க்கை, காரிய தாமதம். |
| மகரம் | மனோதைரியம், பெரியோர் உதவி, தொழில் விருத்தி, சயனசுகம். |
| கும்பம் | விரும்பிய பொருள் கிடைக்கும் வாய்ப்பு, போசனசுகம், தேகநலன், வாகனநன்மை |
| மீனம் | அஜரணக்கோளாறு, கௌரவக்குறைவு, காரிய இடையூறு, வேலைச்சுமை. |

- வளவன்

# சமாதான நடவடிக்கைகளை ஜனாதிபதி உடன் ஆரம்பிக்க வேண்டும்

## ஐ.தே.க கோரிக்கை

(கொழும்பு)

ஒற்றையாட்சிக் கொள்கையிலிருந்து விலகி ஐக் கிய இலங்கையை ஏற்றுக்கொண்டு ஜனாதிபதி சமா தான நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டுமென ஐக்கிய தேசியக்கட்சி கோரியிருக்கிறது.

ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப் பினர் ஜோன்சன்ஸ் பெர்னாண்டோ நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இந்தக் கோரிக்கையை முன்வைத்திருக்கிறார்.

ஒஸ்லோ பிரகடனத்தின் அடிப்படையில் ஐக்கிய இலங்கைக் கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக் கிறது. இதற்கு சுமார் 50 நாடுகள் தமது ஆதரவை வழங்கியிருக்கின்றன.

இந்த நிலையில் பயங்கர வாதத்தைமுறியடித் தல், நாட்டின் இறைமை மற்றும் பாதுகாப்பு என்ற விடயங் களில் தமது கட்சி முழுமையான ஒத்துழைப்பை அரசாங் கத்துக்கு வழங்கி வருவதாகவும் நாடாளுமன்ற உறுப் பினர் ஜோன்சன்ஸ் பெர்னாண்டோ தெரிவித்தார். (க-7)

# சினைப்பர் துப்பாக்கி பறிமுதல்

(கொழும்பு)

புலனாய்வுத்துறை அதிகாரியாகப் பணியாற்றி காணாமல் போன டி.ஐயரட்ணம் குடும்பத்தினரது வீட்டில் இருந்து சினைப்பர் துப்பாக்கியை இராணு வத்தினர் பறிமுதல் செய்துள்ளனர்.

இராணுவம் மற்றும் கல்கிசை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது ஜயரட்ணம் குடும்பத்தினர் வசித்துவந்த அடுக் குமாடிக் குடியிருப்பில் இது பறிமுதல் செய் யப்பட்டது.

இந்த சினைப்பருடன் தூரப் பார்வை கண்ணா டியும் பொருத்தப்பட்டிருந்தது. கடந்த ஆண்டு ஏப் ரல் 27ஆம் திகதி முதல் ஐயரட்ணம் காணாமல் போனார். வெளிநாடு ஒன்றிலிருந்து வந்திருந்த நண்பர் ஒருவருடன் கல்கிசையில் விருந்தொன் றில் பங்கேற்ற பின்னர் ஜயரட்ணம் காணாமல் போனார்.

ஜயரட்ணம் வசித்த வந்த வீட்டில் அவர் காணாமல் போன பின்னர் அவரது குடும்பத்தினர் தங்கியுள்ள னர். இந்த நிலையில் நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக் கையில் சினைப்பர் துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட் டுள்ளது. ஜயரட்ணம் குடும்பத்தினர் வசித்த குடியிருப் பின் வெளிக் கதவு பூட்டப்பட்டிருந்த போதும் உள்ளே நடமாட்டம் இருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இந்த தேடுதல் நடவடிக்கையின் போது பலர் விசா ரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். (க)


# முதலாம் வருட நினைவஞ்சலி

தோற்றம் 14 - 10 - 1944

மறைவு 15 - 04 - 2005



அமரர்

**நவரட்ணம் ஜெயதிலகன்**

-வங்கியாளர்-

*எமது குடும்பத்தின் குத்துவிளக்காக இருந்து*
*எமக்கெல்லாம் ஒளிதந்த நீங்கள் எமை*
*விட்டுப் பிரிந்து ஆண்டொன்று ஓடி*
*மறைந்து விட்டது. எமது வாழ்வில்*
*நீக்கமற நிறைந்து நின்ற உங்கள்*
*நினைவை நெஞ்சில் சுமந்து உங்களை*
*அஞ்சலிக்கின்றோம்*
*நிரந்தரப் பேறு எனும் பேரின்பப் பெரு*
*வாழ்வினை அரசடி அம்மனின்*
*பாதகமலங்களில் பெற்று வீட்டீர்கள்*
*என்ற தேறுதல் பெற்று ஆறுதல் அடைகிறோம்.*

மனைவி, சகோதரர்,
உறவினர்

415

## இன்று ஒரு தகவல்

### புகழ்ச்சி ஒரு மருந்து

ஒரு பாடசாலையில் மாணவர்களிடம் விஞ்ஞான பூர்வமாக ஒரு சோதனை நடத்திப் பார்த்திருக்கிறார்கள். அதாவது அவர்களுக்கு ஒரு பரீட்சை வைத்தார்கள். பரீட்சை வைப்பதற்கு முன் அவர்களைப் பார்த்து... நீங்கள் மிகுந்த புத்திசாலிகள்... மிகவும் கெட்டிக்காரப் பிள்ளைகள்... உங்களிடம் நல்ல திறமை இருக்கிறது. இந்தப் பரீட்சை உங்களுக்கு மிகச் சுலபமாக இருக்கும். என்று சொல்லிப் பரீட்சை எழுத அனுப்பினார்கள்.

இந்தப் புகழ்உரையைக் கேட்டுவிட்டு அவர்கள் பரீட்சை எழுதப்போனார்கள்... எழுதினார்கள். சராசரிக்கும் மேலாக இருந்தது. அவர்களின் பெறுபேறு. அதே மாணவர்களிடம் இன்னொரு பரீட்சை நடத்தினார்கள். அதுவும் முதலில் வைத்தது பேலவே மிகவும் சுலபமான பரீட்சை தான். இருந்தாலும் பரீட்சை எழுதப் போகும் மாணவர்களிடம்....இந்தப் பரீட்சை மிகவும் கஷ்டமாக இருக்கும் இதை திறமையாக எழுதும் அளவுக்கு உங்களுக்குப் புத்திசாலித்தனம் போதாது என்று ஆரம்பித்து அவர்களுடைய குறைகளை சுட்டிக் காட்டிப் பேசிவிட்டு அதன்பின்புபரீட்சை எழுதஅனுப்பிவைத்தார்களாம். இவர்கள் பரீட்சையை சரியாகவே எழுதவில்லையாம். புள்ளிகளும்குறைந்துவிட்டதாம்.

இந்த வித்தியாசத்திற்கு என்ன காரணம்? புகழ்ச்சி தான் அவர்களை புகழ்ச்சியாக பேசி அனுப்பினார்கள். அதிக புள்ளிகள் இவர்களது குறைகளைச் சுட்டிக்காட்டி இகழ்ச்சியாகப் பேசி அனுப்பினார்கள். குறைந்த புள்ளிகள் புகழ்ச்சி என்பது ஒரு அற்புதமான மருந்து என்கின்றனர் நிபுணர்கள். இந்த புகழ்ச்சி மருந்தை நாம் சுலபமாக தாயரிக்கலாம்... தாராளமாக மற்றவர்களுக்குக் கொடுக்கலாம்என்கிறார்கள் அவர்கள். இதற்குக் காசு பணம் செலவாகாது. ஆனால் பலன் அதிகம்.

பள்ளிமாணவர்ளிடம் இந்த மருந்தைக் கொடுங்கள் அவர்கள் நன்கு படித்து நிறைய மதிப்பெண் வாங்குவார்கள். வியாபாரத்தில் உங்கள் கூட்டாளிக்கு இந்த மருந்தை நீங்கள் கொடுங்கள் நன்கு ஒத்துழைப்பார்கள். பணம் சம்பாதிக்கஉங்களுக்கு உறுதுணையாக இருப்பார்கள். உங்கள் குடும்பத்தில் உள்வர்களுக்கும் உறவினர்களுக்கும் இந்த மருந்தைக் கொடுங்கள் சந்தோஷப்படுவார்கள் பாசமாக இருப்பார்கள்.

இந்த மருந்து உங்கள் கைவசம் இருந்தால் நீங்கள் எங்கே போனாலும் மகிழ்சியைப் பரப்ப முடியும். இந்த மருந்தை நீங்கள் இன்னொருவரிடம் கொடுக்கும் போது அது உங்களுக்கும் போதுமான அளவு கிடைக்கும் உங்களை சந்தோஷப் படுத்தும். புகழும்பணமும் சேர அது உதவும்புகழ்ச்சி என்றமருந்துக்கு அவ்வளவு சக்தி இருக்கிறது.

அல்பிரட் அட்வர் என்று ஒருமனவியல் நிபுணர் என்ன செய்வாராம்கவலை, பயம், கலக்கம் இவற்றுக் கெல்லாம் இரையான தனது நோயாளரிடம் போய் சொல்வாராம் நீங்கள் யாரையாவது திருப்தி செய்ய வேண்டும் அல்லது யாருக்காவது மன மகிழ்சியைஉண்டாக்க வேண்டும் என்று தொடர்ந்து நினைத்துக் கொண்டிருங்கள் அப்படி இருந்தால் 14 நாளில் உங்கள் குறைபாடுகள் நீங்கி விடும் என்று சொல்வாராம். அதேமாதிரி நடந்தும் விடுமாம்.

அடுத்தவர்களைத்திருப்திப் படுத் என்ன வழி? பொதுவாக அடுத்தவர்கள் நம்மிடமிருந்து எதை எதிர்பார்க்கிறார்கள்...? நமது புகழ்ச்சியையும் பாராட்டையும் தான்.

வில்லியம் ஜேம்ஸ் எனும் அமெரிக்க தத்துவ ஞானி சொல்கிறார். மனித இயல்பின் ஆழமான தத்துவம் என்னவென்றால் பாராட்டைப் பெறுவதற்காக ஏங்குவதுதான் என்கிறார். இந்த இரகசியத்தை நாம் புரிந்து கொண்டால் போதும் வாழ்வில் வெற்றியடைவது சுலபம்.

இந்த விபரங்களை யெல்லாம் எனக்குத் தெரிந்த ஒருவரிடம் சொல்லிக் கொண்டிருந்தேன். உடனே அவர் சார் நீங்கள் சொன்னபடி நடந்து கொள்ள இப்போதே ஆரம்பிக்கிறேன் என்று சொல்லிவிட்டு ஒருபேப்பரையும் பேனாவையும் எடுத்து வைத்துக் கொண்டு எழுத ஆரம்பித்துவிட்டார்.

என்ன எழுதுகிறீர்கள்? என்றேன். பாராட்டுக் கடிதம் எழுதுகிறேன் போனவாரம் இந்தப் பத்திரிகையில் வந்த சிறுகதையைப்பாராட்டி எழுதுகிறேன்-கதாசிரியரை புகழ்ந்து நான்கு வார்த்தை எழுதப் போகிறேன் என்றார். கதாசிரியர் யார்? என்று கேட்டேன். அவர் மெதுவாக என் அருகேவந்து நான் தான் சார் அது என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## ஐ.நா. அமைதிப்படை தேவையில்லை ஆஸி. ஊடகத்துக்கு அகாசி கருத்து

(கொழும்பு)

இலங்கையில் மீண்டும் முழு அளவிலான யுத்தம் ஏற்படதா வரையில் ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப் படை தேவையில்லை என்று ஜப்பானிய சிறப்புத் தூதுவர் யசூசி அகாசி கருத்துத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவுஸ்திரேலிய ஊடக நிறுவனம் ஒன்றுக்கு அகாசி அளித்த நேர்காணலில் ஒஸ்லோவில் கடந்த வாரம் இணைத்தலைமை நாடுகள் கூட்டம் நடைபெற்றது. இம்மாத இறுதியில் ஜப்பானின் டோக்கியோவில் மீண்டும் இணைத் தலைமை நாடுகளின் கூட்டம் நடைபெறவுள்ளது.

இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினரை மீறி மீண்டும் முழு அளவிலான யுத்தம் இலங்கையில் ஏற்படாத வரையில் ஐக்கிய நாடுகள் சபையினது அமைதிப்படை தேவைப்படாது என்று கருதுகிறேன்.

கருணா குழு விவகாரமானது அமைதி முயற்சிகளை சிக்கலாக்கியுள்ளது. இது தொடர்பில் முறைப்படியான வேண்டுகோளை அரசாங்கத்திடம் நோர்வே அனுசரணையாளர்கள் முன்வைத்துள்ளனர்.

இக்குழுவினருக்கு அரசாங்கம் ஆதரவளிப்பது தொடர்பில் தமிழீழ விடுதலைப்புலிகள் கவலை தெரிவித்துள்ளனர்.



இது விடயத்தில் அரசாங்கம் வெளிப்படையாக செயற்பட வேண்டும் என்று அரசாங்கத்துடனான பேச்சுக்களின் போது நாமும் வலியுறுத்தியுள்ளோம்.

அவுஸ்திரேலியாவில் இலங்கைத் தமிழர்கள் அதிகம் வாழும் நிலையில் அவுஸ்திரேலியாவின் பங்கும் முக்கியமானது. இலங்கை அமைதி முயற்சிகளில் பங்கேற்றுள்ள தரப்பினருக்கு அவுஸ்திரேலியா அதரவளிக்க வேண்டும் என்பது குறித்து அந்நாடு சிந்திக்க வேண்டும்.

தென்னிலங்கையின் ஒருமித்த கருத்து உருவாக்கத்துக்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடின முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார். அமைதி முயற்சிகள் தொடர்பில் மஹிந்த ராஜபக்ஷ சில உறுதியான முடிவுகளைத் தற்போது மேற்கொண்டிருக்கக் கூடும் என்று கருதுகிறேன். (க)

## உதயன் பணியாளர்கள் கொலையை கண்டித்து கொழும்பில் ஊடகவியலாளர்கள் ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். உதயன் நாளேட்டின் பிரதான பணிமனையில் வைத்து இனந்தெரியாத ஆயுத தாரிகளால் அதன் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து கொழும்பில் நேற்று முன்தினம் இரவு கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஊடக அமைச்சர் அனுரா பிரியதர்சன யாப்பா ஏற்பாடு செய்திருந்த இரவு நேர விருந்தில் பங்கேற்றிருந்த ஊடகவியலாளர்களுக்கு உதயன் பணியாளர்களின் படுகொலை செய்தி தெரியவந்தது.

இதையடுத்து அமைச்சரின் விருந்தைப் புறக்கணித்த ஊடகவியலாளர்கள் கொழும்பு கோட்டை தொடரூந்து நிலையம் முன்பாக ஒன்றுதிரண்டு கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

தொடரும் ஊடகவியலாளர்கள் படுகொலையில் உரிய விசாரணைகளை அரசாங்கம் மேற்கொள்ள வில்லை என்றும் ஊடகவியலாளர்கள் குற்றம் சாட்டினர்.

ரிச்சார்ட் டிசொய்சா, மயில்வாகனம் நிமலராஜன், சிவராம் தராக்கி உள்ளிட்ட ஊடகவியலாளர்களின் படுகொலை வரிசையில் உதயன் பணியாளர்கள் தற்போது கொல்லப்பட்டிருப்பதாகவும் குற்றவாளிகளை நீதியின் முன் அரசாங்கம் நிறுத்த வேண்டும் என்றும் ஊடகவியலாளர்கள் கோரிக்கை விடுத்தனர்.

ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடனப் படுத்தப்பட்ட ஊடக சுதந்திர நாளில் இப்படுகொலை நிகழ்த்தப்பட்டிருப்பதை வன்மையாகக் கண்டிப்பதாகவும் கொழும்பு ஊடகவியலாளர்கள் தெரிவித்தனர்.

மேலும் இப் படுகொலைகளை அரச தரப்பினர் கண்டிப்பதோடும் அரசியல் இலாபங்களுக்காக நினைவு நாட்களை நடத்துவதோடும் நின்றுவிடுவதாகவும் ஊடகவியலாளர்கள் கூறினர்.

கொழும்பில் உள்ள எல்லை கடந்த ஊடகவியலாளர் அமைப்பின் ஆசியப் பொறுப்பாளர் வின் சென்ப்ரொ செல் மற்றும் கொழும்பு ஊடகவியலாளர்கள் கூறுகையில் இப் படுகொலைகளுக்குக் காரணமாகக் கூறப்படும் துணை இராணுவக் குழுவினருக்கு தண்டனை அளிப்பதிலிருந்து அரசாங்கம் விலக்கு அளிப்பதாகவும் குற்றம் சாட்டினர்.

இதற்கிடையில் உதயன் நாளேட்டின் பணியாளர்கள் படுகொலை குறித்து பாரபட்சமற்ற விசாரணை நடத்த வேண்டும் என்று பொலிஸ் மா அதிபர் மற்றும் இராணுவத்தினருக்கு மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ள தாக ஊடகத்துறை அமைச்சர் அனுரா பிரியதர்சன யாப்பா தெரிவித்தார். (க)

## மஹிந்தவின் சிந்தனை மூலம் தமிழருக்கு மண்டை ஓடு தான் கிடைக்கின்றது

### அரியநேந்திரன் எம்.பி.

(கொழும்பு)

பேச்சுவார்த்தை என்ற போர்வையை வைத்துக் கொண்டு அரசு தமிழ் மக்களை அடக்குமுறைகளால் ஒடுக்கி கொடூர படுகொலைகளைசெய்து கொண்டு வருகின்றது இவ்வாறு நாடாளு மன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் தெரிவித்தார்.

கடந்த திங்கட் கிழமை மாலை திருப்பழுகாமத்தில் நடைபெற்ற மேதின நிகழ்வில் தலைமையுரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

ஜனாதிபதி மஹிந்தவின் சிந்தனையின் மூலம் தமிழ் மக்களுக்கு மண்டையோடும், எலும்புத் துண்டுமே கிடைக்கின்றது தவிர எவ்வித விமோசனமான நன்மைகளும் கிடைப்பதில்லை. அவரின் சிந்தனையானது சிங்கள தேசத்திற்கும் சிங்கள மக்களுக்கும் பொருத்தமானது. தமிழ் மக்களுக்கு அவை பொருந்தாத ஒன்றாகவே உள்ளது.

கடந்த 53வருட காலமாக தமிழ் மக்களை இலங்கை அரசு ஏமாற்றிக் கொண்டே வருகின்றது. காலத்திற்குக் காலம் மாறிக் கொண்டு வரும் இலங்கை ஜனாதிபதிகள் தமிழ் மக்களை கொன்றொழிப்பதையே நோக்காகக் கொண்டு செயற்படுகின்றனர்.

1990 ஆம் ஆண்டு சர்வதேச ரீதியில் பிரகடனம் செய்யப்பட்ட இந்த தொழிலாளர் தினத்தினை இன்றைய நிலையில் நாம் துக்க தினமாக அனுஷ்டித்துக் கொண்டிருக்கிறோம்.

அண்மையில் ஜெனீவாவில் இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சு வார்த்தையில் விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்டு செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தினை அரசு நடைமுறைப்படுத்தாது மாறாக தமிழ் மக்களை நாளுக்கு நாள் படுகொலை செய்து வருகின்றது.

இந்நிலையில் தமிழ் மக்களாகிய நாம் இன்றைய நாளில் எதை செய்யவேண்டும் என்பதைபுரிந்துகொள்ள வேண்டும் எனக் கூறினார். (க-7)

## கிருபானந்த வாரியார்நூற்றாண்டு விழா புதுவையில் கொண்டாட துரித ஏற்பாடு

புதுச்சேரி அருள் மிகு அருண கிரிநாதர் திருப்புகழ் மன்றம், திருமுருககிருபானந்த வாரியார் சுவாமிகளின் நூற்றாண்டு விழாவை புதுவை திருப்புகழ் மன்றத்தின் முதலாவது உலக மகா நாடாக நடாத்தவுள்ளது.

அம் மாநாட்டை யொட்டி வாரியார் சுவாமிகளின் பணிகள் தொடர்பானமாநாட்டுமலரொன்றைவெளியிடவுள்ளது.

இம்மலருக்கு ஆர்வமுள்ள அறிஞர்களிடமிருந்து 3 பக்கங்களுக்கு குறையாத கட்டுரைகளை எதிர்பார்க்கின்றது.

"வாரியாரும் அருணகிரி நாதரும்" "வாரியார் கண்ட வயலூரார்" வாரியாரின் குருநாதரும் பெற்றோரும்" "வாரியாரின் தமிழுணர்வும் இனவுணர்வும்" வாரியாரும் பெரியாரும், வாரியாரும் அண்ணாவும், வாரியாரும் கலைஞரும், வாரியாரும் எம். ஜி. ஆரும்., வாரியாரும் காமராசரும், வாரியாரும் சக்கரவர்த்தியும், வாரியாரும் ஊரும் உறவும், வாரியார் உணர்த்தும் முப்பொருள் உண்மைகள் திருப்புகழ் உணர்த்தும் ஆன்மீகம், திருவகுப்பின் சிறப்பு, வேல்விருத்தம் மயில்விருத்தம் சேவல்விருத்தம் -ஆய்வுகந் தரனு பூதி, கந்தரலங்காரம் காட்டும் தெய்வீக உணர்வு, அருண கிரிநாதர் சிந்தித்த ஆன்மீகப் பெருமக்கள், அருணகிரிநாதரை சிந்தித்த அருளாளர்கள், திரு எழுகூற்றிருக்கை, கந்தரந்தாதி உணர்த்தும் உண்மைகள் என்ற பொருள்களில் கட்டுரைகளை எழுதலாம்.

கட்டுரைகள் ஜுன் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக வை. நாராயண சாமி பி. ஏ.பி. எல் இல 5, 2 ஆம் குறுக்குத் தெருவெங்கட்டா நகர், புதுச் சேரி இந்தியா என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும். (சு)

# வதோராவில் மீண்டும் கலவரம் துப்பாக்கிச் சூட்டில் 5பேர் பலி

குஜராத் மாநிலம் நகரத்தில் ஆக்கிரமித்து கட்டப்பட்ட கட்டடங்களை மாநகராட்சி நிர்வாகம் அந்த மாநில உத்தரவுப்படி இடித்து வருகிறது. பல இந்துக் கோவில்கள் கூட இவ்வாறு இடிக்கப்பட்டன.

நடுரோட்டில் கட்டப்பட்டு இருந்த 200 ஆண்டு பழமை வாய்ந்த தர்கா ஒன்றை இதேபோல இடிக்கச் சென்ற போது கலவரம் ஏற்பட்டது. இந்த கலவரத்தை அடக்க பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 2 பேர் பலியானார்கள். 16 பேர் படுகாயமடைந்தனர். கலவரக்காரர்கள் கத்தியால் குத்தியதில் ஒருவர் பரிதாபமாகச் உயிரிழந்தார். மேலும் கலவரக்காரர்கள் தாக்கியதால் சில பொலிஸ்காரர்கள் உட்பட 50க்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்தனர்.

கலவரத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வதோதரா நகரம் முழுக்க ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (து)

# 7 மணித்தியாலத்தில் 65 கி.மீ தூரம் ஓடிய 4 வயது சிறுவனின் மரதன் சாதனை

கொளுத்தும் வெயிலில் 7 மணி நேரத்தில் 65 கி.மீ தூரம் ஓடிய 4 வயது சிறுவன் லிம்கா சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளான்.

ஒரிசா மாநிலத்தைச் சேர்ந்த புதியா சிங் என்ற சிறுவன் பிறந்து 4 ஆண்டுகளும், 3 மாதங்களும் ஆகின்றன. இந்த வயதிலேயே இச் சிறுவன் ஓட்டப்பந்தய வீரனாகத் திகழ்கிறான். பூரி நகருக்கும், புவனேஸ்வரத்துக்கும் இடையிலான 70 கி.மீ. தூரத்தை பலதடவை ஓடிக் கடந்துள்ளான். இவனது சாதனையைப் பலரும் அறியச் செய்ய மத்திய ரிசர்வ் பொலிஸ் படை முடிவு செய்தது. அந்தச் சாதனை நிகழ்ச்சி நேற்று முன்தினம் நடைபெற்றது.

பூரி ஜெகனாதர் கோவிலில் தொடங்கி புவனேஸ்வரத்தில் உள்ள ரிசர்வ் பொலிஸ் படை மைதானம்வரை 70 கி.மீ மரதன் ஓட்டம் ஓடுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

அதிகாலை 4 மணிக்கு பூரி ஜெகனாதர் கோவிலில் சாமி குட்பிட்டு விட்டு புதியாசிங் ஓடத்தொடங்கினான். அவனுடன் அவனது பயிற்சியாளர் பிராஞ்சிதாசும் ஓடினார். ரிசர்வ் பொலிஸ் மருத்துவ அதிகாரி ஜே நாயக் ஒரு காரில் பின் தொடர்ந்தார்.

நேரம் ஆக ஆக வெயில் அடிக்கத் தொடங்கியது. கொளுத்தும் வெயிலில் புதியாசிங் ஓடினான். இலக்கை அடைய 5 கி.மீ தூரமே இருக்கும்போது அவன் சோர்வடைந்துவிட்டான். எனவே மேற்கொண்டு அவன் ஓடக்கூடாது என்று மருத்துவ அதிகாரி ஜே.நாயக் தடுத்துவிட்டார். அந்த இடம்வரை 65 கி.மீ தூரம் புதியாசிங் ஓடியுள்ளான்.

புதியாசிங்கின் சாதனையை லிம்கா சாதனைப் புத்தகத்தின் உதவி ஆசிரியர் அம்ரீன் பிர் நேரில் பார்த்தார்.

இவ்வளவு சிறுவயதில் 65 கி.மீ தூரத்தை யாரும் கடந்தது இல்லை. முழு மரதன் என்பது 42 கி.மீ தூரம்தான். அதையும் தாண்டி ஓடிய புதியாசிங்கின் சாதனை ஈடு இணையில்லாதது.

எனவே அடுத்த ஆண் டுக்கான லிம்கா சாதனைப் புத்தகத்தில் புதியாசிங்கின் சாதனை குறித்த விபரம் இடம்பெறும். (து)



ரேபரேலி தொகுதியில் தன் தாய் சோனியாவுக்காக தேர்தல் பிரசாரம் செய்துவரும் ராகுல் காந்திக்கு கைகொடுக்க அங்குள்ள மக்கள் முந்துகிறார்கள்.

# அ.தி.மு.க கூட்டணிக்கு — மறுமலர்ச்சி கழகம் ஆதரவு

(புதுச்சேரி)

எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலில் அ.தி. மு.க தலைமையிலான கூட்டணிக்கு தேர்தல் பிரசாரம் செய்ய புதுச்சேரி மாநில அம்பேத்கர் மறுமலர்ச்சிக் கழகம் முடிவு செய்துள்ளது.

புதுச்சேரி மாநில அம்பேத்கர் மறுமலர்ச்சி கழக மாநில செயல் வீரர்கள் கூட்டம் மாநில செயல் தலைவர் தமிழ்மணி தலைமையில் அதன் தலைமை அலுவலகத்தில் நடந்தது.

கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக பு.மு.கா. எஸ்.டி அணி மாநில தலைவர் ராஜசேகர் தன்ராஜ், சேகர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

கூட்டத்தில் வரும் சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க தலைமையிலான கூட்டணியில் பு.மு.க. 10 இடங்களில் போட்டியிடுகிறது.

இக்கட்சியின் வேட்பாளர்களை ஆதரித்தும், கூட்டணி கட்சிகளை ஆதரித்தும் புதுச்சேரி மாநிலம் முழுவதும் பிரசாரம் செய்ய அம்பேத்கர் மறுமலர்ச்சிக் கழகம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

அம்பேத்கர் மறுமலர்ச்சிக் கழக கொள்கை பரப்பு செயலாளர் குணசேகரன் நன்றி கூறினார். (க)

இந்திய வலம்



எதிர்க்கட்சித் தலைவர் அத்வானி, அவர் மனைவி மற்றும் ராஜஸ்தான் முதல்வர் வசுந்தரா ராஜே ஆகியோர் காஷ்மீரில் புனித புஷ்கர் ஏரியில் நடந்த பூஜையில் கலந்துகொண்ட போது....

# இந்தியா- கட்டார் இடையே அதிவிரைவு கப்பல் சேவை

(துபாய்)

இந்தியாவில் இருந்து கட்டாருக்கு அதிவிரைவு கப்பல் போக்குவரத்து சேவைகளை கிரீஸ் நாட்டு கப்பல் கம்பெனிகள் ஆரம்பித்திருப்பதாக கிரீஸ்நாட்டு துணை நிதியமைச்சர் பீட்டர் டாக்கோஸ் தெரிவித்துள்ளார்.

இந்த விரைவு கப்பல்களில் பயணிகள் போக்குவரத்து மட்டுமல்லாது கார், லொரி போன்ற வாகனங்களும் கொண்டு செல்லப்படும் என்று டாக்கோஸ் தெரிவித்தார்.

கட்டார் தலைநகர் டோகாவுக்கு வந்திருந்தபோது டாக்கோஸ் இத்தகவலை வெளியிட்டார்.

கப்பல் போக்குவரத்து வர்த்தகத்தில் கிரீஸ் நாட்டு நிறுவனங்கள் முன்னணியில் இருப்பது குறிப்பிடத்தக்கது. (க)

# அமெரிக்காவில் இந்தியருக்கு விருது

(துபாய்)

கணனிதுறை வளர்ச்சிக்காக சிறப்பாகப் பணியாற்றியதை பாராட்டி அமெரிக்காவில் வாழும் இந்தியருக்கு 2006ஆம் ஆண்டிற்கான வன்னீவர் புஷ் விருது வழங்கப்பட்டது.

இந்தியாவில் பிறந்தவர் ராஜ்ரெட்டி. அமெரிக்காவில் உள்ள கர்னகெல் மெலன் பல்கலைக்கழகத்தில் ரோபோக்களின் பயன் மற்றும் தயாரிப்பு பற்றிய ஆய்வு துறையின் இயக்குனராக பணியாற்றி வருகிறார்.

மேலும் 1990ஆம் ஆண்டு அமெரிக்க அதிபரின் தகவல் தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவின் உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார். இந்தக் காலகட்டத்தில் அமெரிக்க அரசிற்கு அன்னிய முதலீடுகளை ஈர்க்கும் வகையிலான முக்கியத்துவம் வாய்ந்த ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

இதுதவிர, பர்சனல் கம்பியூட்டர், ரெலிபோன், ரீ.வி, வீடியோ-போன் ஆகியவற்றை ஒருங்கிணைத்து புதிய கருவி ஒன்றை உருவாக்கும் முயற்சியிலும் இவர் இறங்கியுள்ளார்.

கம்பியூட்டர் துறை வளர்ச்சிக்காக சிறப்பாக பணியாற்றிதை பாராட்டி ராஜ்ரெட்டிக்கு கடந்த திங்கட்கிழமை தேர்காவில் 2006ஆம் ஆண்டிற்கான வன்னீவர் புஷ் விருது வழங்கப்பட்டது. கட்டார் நாட்டு மன்னரின் மனைவி விருதை வழங்கிக் கௌரவித்தார். (க-7,9)

# பிரமோத் மகாஜனின் உடல் நிலையில் முன்னேற்றம் எதுவும் இல்லையாம்

(மும்பை)

பாரதீய ஜனதா தலைவர் பிரமோத் மகாஜன் கடந்த 22ஆம் திகதி அவரது தம்பி பிரவீன் மகாஜனால் துப்பாக்கியால் சுடப்பட்டு மும்பை இந்துஜா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்.

அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதுகுறித்து இந்துஜா ஆஸ்பத்திரியின் இயக்குனர் டாக்டர் அனுபம் வர்மா வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த 2 நாட்களாக மகாஜனின் உடல் நிலை தொடர்ந்து கவலைக்கிடமாக இருந்து வருகிறது. அவரது உடல் நிலையில் முன்னேற்றம் எதுவும் இல்லை.

அவருக்கு அளிக்கப்பட்டு வரும் தற்போதைய மருத்துவ சிகிச்சை முறை தொடர்ந்து அளிக்கப்ப டும் என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. (க)

# பஸ் ஆற்றுக்குள் விழுந்ததில் 30 பேர் மரணம்

(மும்பை)

மராட்டிய மாநிலம் காஷ்மீராவில் இருந்து தானே நோக்கிச் சென்றுகொண்டிருந்த தானே மாநகராட்சி போக்குவரத்துக் கழக பஸ் சேனா கிரீக் என்ற இடத்தில் உள்ள பாலத்தின் மீது சென்றபோது கட்டுப்பாட்டை இழந்தது.

அதனால் பஸ் தாறுமாறாக ஓடி பாலத்தை இடித்துக்கொண்டு ஆற்றுக்குள் விழுந்தது.

இந்த விபத்தில் 30 பேர் பலியானார்கள். டிரைவர் உட்பட 30 பேர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் மும்பை பகவதி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (து)



# யாழ்ப்பாணம் – நல்லூர்

## அருள் மிகு மூத்த விநாயகர் ஆலய

## ஜீர்ணோத்தாரண அஷ்ட பந்தன பிரதிஷ்டா



# மஹா கும்பாபிஷேகம்

## அருள்ஆசிச் செய்தி

அன்புள்ள விநாயக அடியார்களிற்கு!

யாழ்ப்பாணம் நல்லூரில் எழுந்தருளி இருந்து அருளாட்சி புரியும் அருள் மிகு மூத்த விநாயகர் பெருமானிற்கு இன்று மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவது அனைவரிற்கும் மகிழ்ச்சியை தருகின்றது. பன்னிரண்டு வருடங்களிற்கு ஒருமுறை நடைபெறும் அபிஷேகம் கும்பாபிஷேகம் ஆகும்.

வரலாற்று பெருமை மிக்க நல்லூர். பல ஆலயங்களைக் கொண்ட பிரதேசமாக விளங்குகின்றது. இவ்வரிசையில் மூத்த விநாயகர் ஆலயமும் ஒன்றாகும். எல்லாவற்றிற்கும் மூத்தவராக விநாயகப் பெருமான் வேண்டுவார் வேண்டுவதை ஈயும் பொருட்டு விநாயகப் பெருமான் இவ் ஆலயத்தில் நீண்ட காலமாக எழுந்தருளி இருக்கின்றார். இவ் ஆலயத்தில் நடைபெறும் மஹா கும்பாபிஷேகம் இங்கு வாழும் மக்களிற்கும் ஆலயத்துக்கும் புனிதத்தை ஏற்படுத்துவ தாகும். விநாயக வழிபாடு நம் சமயத்தில் முக்கியமான இடத்தை பெற்றிருக்கின்றது. எளிமையானதாகவும் கண்டிப்பானதாகவும் விநாயகருடைய வழிபாடு அமைந்திருக்கின்றது.

இதனை மையமாக கொண்டு இங்கு வாழ்ந்த முன்னவர்கள் விநாயகரிற்கு ஆலயம் அமைந்து அனைவரும் ஆன்மீக சிந்தையோடும் மன அமைதியோடும் வாழ்வதற்கு வழி வகுத்திருக்கின்றனர். இதனை மனதிற் கொண்டு இங்கு நடைபெறும் மஹாகும்பாபிஷேகத்தை சிறப்பாக செய்து மண்ணில் நல்லவண்ணம் வாழ பிராத்திக்கின் றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு."

*ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக*
*ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்*

## ஆசிச் செய்தி

அகில அண்டங்களையும் இரட்சித்து சகல ஜீவராசிகளுக்கும் அருள் புரிந்து ஆட்கொள்ளும் சிவன் தான் வழங்கிய வரங்களினால் பலமுற்ற கஜமுகாசுரன் தேவர்களை அடக்கிப் பயமுறுத்தி துவம்சம் செய்வதனைக் கண்டு அத்தேவர்களினதும் முனிவர்களினதும் இடைவிடாத பிரார்த்தனைகளின் பயனாக அத்தேவர்களைக் காக்கும் பொருட்டு விநாய கப்பெருமானைத் தோற்றுவித்தார். எல்லாம் வல்ல இறை வன் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், சூரியன், சந் திரன், யஜ மானன் எனும் அஷ்ட மூர்த்திகளாய் காட்சிதருகின்றார். சக்தியும் சிவமுமாகிய தன்மையே இவ்வுலகமெல்லாம் என்று சைவ சித் தாந்தம் உண்மையைக் கூறி வைக்கின்றது. கடவுள் உண்மைப் பொருள் என்றும் அதற்கு அழிவு நேர்வதில்லை என்றும் உலகம் தோன்றி நின்று மறையும் தன்மை அது என்றும் நிச்சயப் பொருளாகிய இறை வனின் சக்தி பின் மனிதனாகக் காணப்படுகின்றான். அதனால்தான் மக்கள் பலபல கோயில்களைக் கட்டி வணங்குகிறார்கள்.

4.5.2006ஆம் ஆண்டு பல உயர்தத்துவக் கருத்துக்கள் மிக்க மகா கும் பாபிஷேகத்தை இயற்றுவோர், இயற்றிவிப்போர், காண்போர் எல்லோரும் பாக்கியவான்களே இதுவே மானுட ஜன்மம் எடுத்த பெரிய வரப்பிரசாதம் ஆகும்.

குழந்தை பெற்று விட்டால் மட்டும் போதாது அக்குழந்தையை நல்ல முறையில் சீராக வளர்த்து ஓர் உன்னத நிலையை அடையச் செய்து பலருக்கும் பயன்படக்கூடிய வகையில் உயர் பணிபுரிந்து புகழ் பெறும் கால் அவனால் பெற்றோருக்கும் பிறந்த பொன்நாட்டிற்கும் பெருமை தரும் அன்றோ அது போல் ஆலயம் திருத்தி அமைத்து விட்டதும் திருப்பணி நிறைவுற அங்கு நாள் தோறும் நித்திய நைமித்திய விஷேட அபிஷேக ஆராதனை விழாக்கள் மட்டுமன்றி சமயப்பணிகள், திருமுறை ஓதுதல் ஆகியன நிகழ்ந்து ஒரு முன் மாதிரியான ஆலயமாகத் திகழ அறங்காவலர்கள், அடியார்கள், அன்பர்கள் முழுமனதுடன் பணிபுரிதல் பெரும் புண்ணியமாகும். இப்படிப்பட்ட நன் நாளிலே எல்லோரும் இன்புற்றுவாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

*"லோகாஸ்சமஸ்தாஸ் கினோபவந்து"*
உலக மாந்தர் அனைவரும் இன்புற்று வாழ்க

*கிரியா பூஷணம் பிரம்மஸ்ரீ*
*சு. முரளீதரக் குருக்கள்*

## தலைவரின் வாழ்த்துச் செய்தி

இந்த ஆலயத்தின் தர்மகர்த்த சபையின் தலைவர் என்ற வகையில் இன்றைய பல்வேறு இன்னல்கள் நிறைந்த சூழ லின் மத்தியிலும் நாம் காலாகாலமாக செய்துவந்த இத் திருப்பணி தொடர்ந்து இன்றைய கும்பாபிஷேகம் இவ்வளவு சிறப்பாக இங்கே நடந்து கொண்டிருப்பதை எண்ணி மகிழ்ச்சிகொள்கிறேன்.

இக் கைங்கரியம் நிறைவேற தெய்வீக அருள்கிடைக் கப்பெற்றது மன நிறைவைத்தருகிறது. எம்மால் ஆவதொன்றுமில்லை. நாமெல்லாம் காலத்தின் கருவிகள். கடவுள் நம்பிக்கையும் வழிபாடுமே இது. காலவரை எம்மை வழிநடத்தி வந்துள்ளது. என்றைக்கும் பொது வான உலக நியதியும் அதுவே.

இந்தலோகத்த தெய்வக்கோட்பாட்டில் நம்பிக்கை கொண்டு ஊரும் உலகும் சேமமுற வேண்டி இத்தகைய திருப்பணிகளை நாம் செய்து வருகிறோம்.

எம்மால் முடிந்தது இவ்வளவே! இத்திருப்பணிக்கு ஒத்துழைப்பு நல்கிய தேவஸ்தான உறுப்பினர் களுக்கும் கும்பாபிஷேக, சபையினருக்கும் மனமார்ந்த நன்றிகள் தெரிவித்து எல்லாம் வல்ல மூத்த விநாயகர் பெருமான் எல்லோருக்கும் அருள் பாலிக்கவேண்டி பிரார்த்திப்பதுடன் எதிர்காலத்தில் மென்மேலும் இப்பணிகள் சிறப்புற அமைய வாழ்த்துகின்றேன்.

**கா. இராசரெத்தினம்**
தலைவர்
நல்லூர் மூத்தவிநாயகர் தேவஸ்தானம்.

## நல்லூர் மூத்த விநாயகர் ஆலய வரலாற்றுக் குறிப்புக்கள்

இன்று மே 4ஆம் நாள் கும்பாபிஷேக குடமுழுக்கு காண்கின்ற நல்லூர் மூத்த விநாயகர் ஆலயமானது ஈழத்தின் வட புலத்திலே பிரசித்தி பெற்ற நல்லையம் பதியிலே நல்லைக்கந்தன் ஆலயத்தில் மணி ஒலிக்க கேட்கும் முன்புற வாசலிலே அமைந்துள்ளது.

தன்னை நம்பும் மெய்யடியார்களுக்கு அருளாட்சி புரியவென்று எழுந்தருளி கோயில் கொண்ட மூத்த விநாயகர் ஆலயத்திற்கு வட திசையில் வெய்யிலுகந்த பிள்ளையாரும் கிழக்கே அரசடி விநாயகரும் தென்புறத்தே பாணன் குளம் நாச்சியம்மனும் அருள்பாலித்து வருகின்றார்கள்.

நல்லையம் பதியில் நடுநாயகமாக பிரசித்தி பெற்று விளங்குகின்ற இந்த மூத்த விநாயகர் ஆலயமானது 1800 ஆம் ஆண்டுகளில் மூத்த நயினார் என்ற பெயரில் இருந்து வந்துள்ளது எனவும் சுண்ணாம்புக்கல்லால் அமைக்கப்பட்டு ஓலைக் கூரை இடப்பட்ட ஒரு சிறிய கோவிலாக இருந்து வந்துள்ளது எனவும் அறிய முடிகிறது.



இக்கோவில் இப்போது அமைந்துள்ள இடம் முன்பு புன்னன் சந்தி என அழைக்கப்பட்டது. இவ்வாலயத்தின் ஸ்தாபகராக அமரர் தம்புத்தர் என்பவர் இருந்து வந்துள்ளார். காணியின் உரிமை தாரராகவும் முதலாவது முகாமையாளராகவும் அமரர் ஐந்துவரிப்பிள்ளை சின்னத்தம்பி இருந்துவந்துள்ளார்.

இதை 1892ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் பணிமனையில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் மூலம் அறிய முடிகிறது. பின்னர் 1850 ஆம் ஆண்டுகளில் மடாலயமாக அமைப்பு செய்யப்பட்டு கும்பாபிஷேகம் அதனைத்தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெற்றுவந்ததாகவும், வருடத்தில் பத்து நாட்கள் அலங்கார உற்சவங்கள் நடைபெற்று வந்ததாகவும் இருகால பூசைகள் நித்திய பூசையாக நடைபெற்றுவந்ததாகவும் சொல்லப்பட்டுள்ளது.

இவ்வாறு மடாலயமாக இருந்துவந்துள்ள ஆலய மானது ஆகம விதிகளுக்கு அமைவாக மீள் நிர்மாணம் செய்யப்பட்டு 1907ஆம் ஆண்டு பங்குனி உத்தர பெருநாளன்று கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இக் கும்பாபிஷேகம் கொக்குவில் சண்முக ஐயரின் மூத்தமகன் அமரர் ஸ்ரீலஸ்ரீ சின்னையா குருக்கள் அவர்களால் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து அடுத்த கும்பாபிஷேகம் 1931ஆம் ஆண்டு மேற்படி குருக்களாலேயே நடாத்தப்பட்டதாக அறியமுடிகிறது. இக் காலங்களில் நித்திய நைமித்திய பூசைகளை செய்துவந்த குருக்கள், புசகர் வரிசையில் ராசா ஐயர் அவர்களும் அவரைத் தொடர்ந்து மணி ஐயரும் அதன்பின் சாம்பசிவக்குருக்களும் இவருக்குப் பின் பாலசுப்பிரமணிய சர்மா அவர்களும் அவரைத் தொடர்ந்து சிவசுதர்சன் குருக்களும் அதற்குப்பின் வாமதேவக்குருக்கள், முரளி தரக் குருக்கள் ஆகியோரும் செய்துவந்துள்ளார்கள்.

தற்பொழுது பாலகிருஷ்ண குருக்கள் ஆலய குருவாக இருந்து மூன்று கால நித்திய நைமித்திய பூசைகளும் திறம் படச்செய்து வருகிறார். கும்பாபிஷேகத்தொடர்களுமானது இதன் பின்பு 1968ஆம் ஆண்டு ஸ்ரீலஸ்ரீ குமாரசாமி குருக்கள் அவர்களினாலும் பின்னர் 1981ஆம் ஆண்டு சிவஸ்ரீ சுவாமிநாதர் பரமேஸ்வரக்குருக்கள் அவர்களினாலும் அதனைத் தொடர்ந்து 1993ஆம் ஆண்டு சிவஸ்ரீ கைலை வாமதேவக்குருக்கள் அவர்களாலும் செய்யப்பட்டுவந்துள்ளது.

இந்த வரலாற்றுத்தொடரின் 7வது கும்பாபிஷேக குடமுழுக்கு வைபவம் இன்று பிரமஸ்ரீ முரளிதரக்குருக்கள் அவர்களினால் செய்யப்படுகின்றது. இக்கிரிஜை வழிபாடுகளுடன் ஒன்றிணைந்து "மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்ற ஒப்பரும் கோட்பாட்டை மனக்கண் சுமந்து ஊரும் உலகும் சேமமுற பிராத்தித்து நிற்கின்றோம்.

இம்முறை கும்பாபிஷேக நிகழ்வுகளுடன் முக்கிய அம்சமாக கும்பாபிஷேக மலர் ஒன்று வெளியீடுசெய்யவும் தீர்மானித்து அக் கருமங்களும் தெய்வத்தின் துணையுடன் ஒரு புறத்தே நடைபெற்று வருகின்றது. இந்த ஆலயத்தின் வரலாற்றுத் தொடரில் தர்மகத்தா உறுப்பினர்களாகவும் முகாமை நிர்வாக பொறுப்புக்குரியவர்களாகவும் தொண் டாற்றியவர்களில் முழுமையான விபரங்களை உள்ளடக்கிய விரிவான வரலாறு இம்மலரில் இடம்பெறும் என்பதை யும் குறிப்பிட்டு நிறைவு செய்கின்றோம்.

*நிற்கும் கணபதி ஒன்றே நிலைபொருள்*
*என்றே சுட்டும் வேதங்கள் - அது*
*பாதையில் நின்றே பிறவிப் பெருங்கடல்*
*நீந்திக் கரையது சேர்ந்திடலாம் திண்ணம்*

இவ்வண்ணம்
**கும்பாபிஷேக திருப்பணிச்சபை**

## பிரதம குருவின் ஆசிச் செய்தி

தனக்கு மேல் வேறு தலைவன் இல்லாது விநாயகர் எனும் திருநாமம் கொண்டு வினைகளையெல்லாம் நீக்கும் மூத்தியாக பிள்ளையார் விளங்குகிறார்.

தம்மை வழிபடும் அடியார்களுக்கு துன்பங்களையும் துயரங்களையும் நீக்கி இன்னல்களையும் இடுக்கண்களையும் போக்கி அருளை வழங்கி வருபவரே மூத்த விநாயகப் பெருமான். நாம் எக் காரியத்தைத்தொடங்குவதற்கு முன்னும் விநாயகரை பூசித்து வணங்கிவிட்டே அக்காரியத்தைச் செய்யத் தொடங்குகிறோம்.

இவ்வாறு நல்லூர் வாழ் மக்களின் இதயங்களில் நின்று அவர்கள் எதிலும் வெற்றிபெற எமது மூத்த விநாய கப் பெருமான் உதவி புரிகிறார். இவ்வாறு எமது நெஞ்சிலே உறைந்துள்ள மக்களுக்கு அருள்பாலிக்கும் எமது குலத்தெய்வமா கிய ஸ்ரீ மூத்த விநாயகப்பெருமானுக்கு ஜீர்ணோத்தாரண பிர திஷ்டா மகா கும்பாபிஷேகமாகிய இது ஒரு புண்ணியப் பேறாகும்.

எமது ஆலயம் அழகிய வர்ணவேலைப்பாடுகளுடன் சித்திரங்கள் கூடிய அமைப்புடனும் விளங்குவதை பார்க்கும் போது காண் போரை கரங்கூப்பிச் சிரம் தாழ்த்தி மனமுருகி வழிபடச் செய்துவிடும் புதுப்பொலிவுடன் காட்சிதருகின்றது. ஆகவே மூத்த விநாயகப்பெருமானின் ஆசி அனைத்து அடியார்களுக்கும் கிடைக்கப்பெற்று அனைவரும் விநாயகர் கடாட்சம் பெற ஆசி கூறுகிறேன்.

*பிரம்மஸ்ரீ வோ. பாலகிருஷ்ண*
*குருக்கள் பிரதமகுரு.*

## செஞ்சொற்செல்வரின்

### ஆசியுரை

தமிழ் வேந்தர் ஆட்சியில் தலைநகராக விளங்கிய நல்லையம் பதியில் எழுந்த திருக்கோவில்களில் மூத்த விநாயகர் திருக்கோவில் முதன்மையானது. இத்திருக் கோவிலை காலத்துக் குக்காலம் புனர் நிர்மாணம் செய்து திருவருட் பொலிவோடு காத்துவருபவர்கள் இத் திருவூர் அடியவர்கள் இவ்வாண்டு ஆலயத்தில் பல புதிய திருப் பணிகள் நிறை வேற்றப் பட்டு குட முழுக்கு வைபவம் நடை பெறவிருப்பது அறிந்து மிகுந்த ஆனந்தம் அடைகின்றேன்.

சைவ மக்கள் தம் குல தெய்வங்களை பேணிக் காப் பதில் இன்றும் பின்னிற்பதில்லை பலநூறு திருக்கோவில்கள் போர்ச் சூழலிலும் மீள நிலைபெற்று விளங்குவதற்கு மக்களின் இறவாத பக்தியே காரணமாகும். மூத்த விநாயகர் திருக்கோவில் குட முழுக்கு வைபவத் தோடு எம் மண்ணில் அமைதியும் ஆனந்த வாழ்வும் அனைவருக்கும் கிடைக்கவேண்டும் என பிராத்திக்கிறேன்.

பிரணவ சொரூபனாக இப்பிரபஞ்சத்தைக்காக்கும் விநாயகப் பெருமான் எம்மை மன்னிக்கும் மகத்தான தெய்வம். மீளா அடியவர்கள் துயர் போக்கி மேதினியில் நிறைந்த வாழ்வு வாழ அங்குசபாகன் அருள் செய்வார் என்பது சைவ மக்களின் அசைக்க முடி யாத நம்பிக்கை. இனிமேல் நடக் கும் நிகழ்வுகள் யாவும் மேன்மையானவையாக சிறக்க அருள் நிறைந்த மூத்த விநாயகப் பெருமான் பேரருள் தர மீண்டும் பிராத்தித்து ஆலய திருப்பணியில் அயராது உழைத்த அடியவர்கள் திருவடிகளை வாழ்த்தி வணங்கி அமைகிறேன்.

**செஞ்சொற்செல்வர்**
**ஆறு. திருமுருகன்**


விளம்பரதாரர்கள் அனுசரணை

LINGAN CREAM HOUSE
119, Kasthooriyar Road Jaffna

சந்தியா மல்ரி கோட் யாட்
538, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

கமலேஸ்வரி ஸ்ரோஸ்
162, K.K.S. Road
பெரியகடை.

ஜெயலக்ஷன் Fancy
207, K.K.S. Road
பெரியகடை.

அபிராமி அழகுமாடம்
27, பெரியகடை, யாழ்ப்பாணம்.


மஹாரிபடமாடம்
கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

# நெல்சன் மண்டேலா

த. பாண்டியன்

## மீள்பார்வை

### அனுமதி சீட்டு எரிப்பு 33


சிறைச்சாலையில் மண்டேலா

நாலு எட்டு வைத்தவுடன் இன்னொரு அதிகாரி உன்னை நெருக்கடி நிலைச் சட்டப்படி கைது செய்திருகிறேன் என்று கூறி மீண்டும் உளளேஇழுத்துச் செல்வார்.

சட்டப்படி கைது செய்ததாகக் காட்ட இந்த நாடகம்!

இதே காலத்தில் விசாரணையும் தொடர்ந்து நடந்து கொண்டே இருந்தது. பலர் நெருக்கடிச் சட்டத்தின் கீழ் கைதாகி சிறைக்குள் இருந்ததால் மன்றத்தில் தோன்ற முடியவில்லை. நீதிபதி ரம்ப் லுதுலி வராதது கண்டு ஏன் எனக் கேட்டார். நெருக்கடி நிலை எனக் கூறி காவல் துறை கொண்டு போய்விட்டது எனக் கூறப்பட்டவுடன் நீதிபதி அரசைக் கண்டித்து விசாரணைக் குக் குந்தகம் இல்லாமல் நடக்குமாறு கேட்டுக் கொண்டார்.

பல இடங்களிலிருந்தும் விசாரணைக்கு போராளிகள் வந்தனர் அவர்களில் ஒருவர் வில்ட்டன் இவர் தொழிற்சங்கத் தலைவர் .

இவர் நீதிமன்றம் வந்த போது காவல்துறை அங்கே நிற்பவர்களைத் துரத்திக் கொண்டிருந்தது. வில்ட்டனையும் துரத்தினர் அவர் தான் குற்றவாளி எனச் சொன்ன போதும் பொய் பேசாதே! ஓடிப்போ என்றான். ஒரு அதிகாரி ஒருவன் அவரை வாயிலுக்கு வெளியில் தள்ளினான் . வில்ட்டன் நீதிமன்றத்தை விட்டு மட்டுமல்ல நாட்டை விட்டே தலைமறைவாக ஒடி விட்டார் . ஆபி ரிக்கா தேசியக் காங்ரசின் தொழிற்சங்கப் பிரதிநிதியாக வெளிநாடுகளில் சுற்றினார் இராணு வப் பயிற்சிக்காக சீனாவுக்குப் போய்விட்டார்.

கம்யூனிச ஒழிப்புச் சட்டத்தின் கீழ் ஏப்ரல் எட்டம் நாளன்று ஆபிரிக்கா தேசியக் காங்கிரசும் சுத்த ஆபிரிக்க காங்கிரசும் தடை செய்யப்பட்டன. அக் கட்சி உறுப்பினர் அனுதாபி ஆதரவாளர் என இருந்தாலே கைது செய்யலாம். விசார்ணையின்றி சிறையில் போடலாம் . ஒரே ஒரு நொடியில் எல்லோரும் சட்டப்படி தேச விரோதிகள் ஆகிவிட்டனர்.

ஆபிரிக்கச் சிறைச் சாலைகளை வருணிப்பது கடினம் அது ஒரு அநாகரீக சித்திரவதைக் கூடம். அங்கு வெள்ளை நிறக் கைதிகளுக்கு ஒரு வித உணவும் இந்தியருக்கு வேறு விதமாகவும் ஆபிரிக்கர்களுக்கு மிகவும் மோசமாகவும் வழங்கப்படும். உதாரணமாக நல்ல ரொட்டியும் வெண் சர்க்கரையும் வெள்ளையர்க்கு கிடைக்கும். இந்தியருக்கு கருப்பு ரொட்டியும் மஞ்சள் நிறச் சர்க்கரையும் தரப்படும். ஆபிரிக்கர்களுக்கு ரொட்டியும் சர்க்கரையும் கிடையாது.

எல்லாவற்றிலும் நிற வேறுபாடு காட்டப்பட்டது தரப்பட்ட போர்வையில்கூட அந்த வேறுபாடு இருந்தது.

விசாரணை தொடர்ந்து நெருக்கடி நிலைப் பிரகடனத்தால் வழக்கறிஞர்கள் பாதிக்கப் பட்டோருடன் கலந்துபேசக்கூட முடியவில்லை. எனவே வழக்கறிஞர்கள் விசாரணையிலிருந்து விலகிக் கொள்வது என்றும் மண்டேலாவும் டூமா நுக்வேயும் வாதிடுவது என்றும் முடிவு செய்யப்பட்டது. இதன்படி நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டோர் எங்களுக்கு வழங்க் கறிஞர்ககள் இல்லை எனவே நாங்களே வாதிடப்போகிறோம் என அறிவித்தவுடன் வழக்கறிஞர்கள் வணக்கம் கூறி விட்டு வெளியேறினர்.

சிறைக்குள் ஒருவருக்கொருவர் சந்தித்துப் பேசத் தடை இருந்தது. ஆண், பெண் சந்திப்பும் தடை செய்யப்பட்டிருந்தது. கைதானோரில் நாலைந்து பெண்களும் இருந்தனர். அவர்களை சாட்சிகளாக அழைத்தனர். இப் படிச் சந்திக்கும் போது பேசுகிறவர்களைப் பிரிந்து உட்கார வைக்க வலைக்கம்பி இருந்தது. விசாரணை வேண்டுமென்றே நீட்டிக்கப்பட்டது. ஹெலனை சாட்சிக் கூண்டில் நிறுத்தி வயது என்ன எனக் கேட்பார். அவர் பதில் சொல்ல மறுப்பார் இந்த சர்ச்சையில் ஒரு நாள் விசாரணை ஓடி விடும் நெருக்கடி நிலை ஆறு மாதத்தில் முடியக்கூடும் அதுவரை இவ்வாறு இழுத்தடிக்க ஒரு திட்டமிட்ட கேள்வி பதில் போராட்டம்.

ஆனால் இதில் சகபோரா்ளிகள் சிலருக்குச் சந்தேகம் பிறந்தது. மிக மோசமான வழக்கில் பெரிய வழ்க்கறிஞர்களைத் துரத்தி விட்டு இப்படி விளையாடினால் ஆபத்தாகுமே எனப் பேசி னர்.

கூடி எடுக்கப்பட்ட முடிவு என்பதை மண்டேலா விளக்கினார் மீண்டும் விசாரணை தொடர்ந்து காத்ரடாவும் கைதாகியிருந்தார். அவரும் இதே போல குறுக்கு விசாரணையை நீடித்தார் . இந்தக் கட்டத்தில் பிரதமர் வீர்வார்டு நெருக்கடி நிலைவிரைவில் நீக்கப்படும் என அறிவித்தார்.

இதன் பின்னர் மண்டேலாவின் வாக்கு மூலம் தரும் வேளை வந்தது நீண்ட வரலாற்று அரசியல் விளக்கச் சொற்பொழிவு நிகழ்த்தினார். இந்த விளக்கத்தின் போது கம்யூனிஸ்டுக் கட்சியுடனான உறவை விளக்க வேண்டி வந்தது. கம்யூனிசத் தடைச் சட்டத்தின் கீழ் வழக்கு நடப்பதால் எங்களுக்கும் கம்யூனிஸ்டுகளுக்கும் உறவு இல்லை எனக் கூறி கம்யூனிஸ்டுகளை தம்மிடமிருந்து பிரிய விடக்கூடாது அதே சமயம் அரசிடமும் பிடிபடக்கூடாது என்பதால் கம்யூனிஸ்டுகள் செய்த செய்து வந்த உதவிகளைப் பட்டியல் போட்டு விவரித்தார். கம்யூனிசமும் விடுதலை இயக்கத்திற்கு ஊக்கம் தருகிறது என்றார்.

இதைக் கேட்ட நீதிபதி கம்யூனிஸ்டு ஆட்சியில் ஒரு கட்சி ஆட்சி தானே நடைபெறும் அதை அங்கீகரிக்கிறாயா? என நீதிபதி கேட்டார். மண்டேலா நிதானமாகப் பதில் கூறினார். ஒரு கட்சியா? பல கட்சிகளா? எது சிறந்தது. என்பது நல்ல கேள்வி தான் அதை விட மக்களை மதிக்கும் சுதந்திரத்தை வழங்கும் ஜனநாயகம் எங்கு இருக்கிறது? எனக் கேட்பது தான் நல்லது. அது பல கட்சிகள் இயங்கும் நாட்டிலும் ஜனநாயகம் சாகடிப்படலாம். ஒரு கட்சி ஒரு மனிதன் ஆட்சியிலும் ஜனநாயகம் காக்கப்படலாம் ஏன்? நம் நாட்டில் பல கட்சிகள் இருக்கின்றன. ஆனால் ஜனநாயகம் இருக்கிறதா? எனக் கேட்டார்.

நம்முடைய நாட்டில் கட்சிகள் இருக்கின்றன இருந்தும் நம் நாட்டில் ஜனநாயகம் எங்கே இருக்கிறது? எனவே ஒரு கட்சியாக? பல கட்சிகளா? என யோசிக்காமல் ஜனநாயகத்தைக் காப்பது பற்றிச் சிந்திப்பதே நல்லது என மண்டேலா கூறியவுடன் நீதிபதி நாற்காலியில் சாய்ந்து விட்டார். அடுத்தாற்போல் நீதிபதி ஒன்றுமறியாத பாமரர்கள் ஆட்சியில் பங்கேற்பதால் என்ன பலன் எனக் கேட்டார்.

மண்டேலா படிப்பறிவில்லாத வெள்ளையர் வாக்களிப்பதால் என்ன பலன் எனத் திருப் பிக் கேட்டார் இவ்வாறு வாதம் சிறிது நேரம் அரசியல் கொள்கைகள் மீது நடந்தது. ஆகஸ்டு கடைசி நாளன்று நெருக்கடி நிலை தளர்த்தப்பட்டது . இருந்தாலும் மேலும் ஒன்பது மாதங்கள் விசாரணை தொடர்ந்து சாட்சி சொன்னவர்களில் 81 வயது பாதிரியாரும் ஒருவர்.

(தொடரும்)

## இலங்கை மாணவர்கள் இந்தியாவில் பட்டப்படிப்பை மேற்கொள்ளலாம்

(கொழும்பு)

இலங்கை மாணவர்கள் இந்தியாவில் ஹோமியோபதி மருத்துவத்துறையில் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கான வாய்ப்பினை வழங்குவதற்கு இந்திய அரசாங்கம் முன்வந்துள்ளது.

முதல் கட்டமாக இந்த ஆண்டு 15 இலங்கை மாணவர்களுக்கு இதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளதாக சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இது கொல்கத்தாவில் அமைந்துள்ள தேசிய ஹோமியோபதி நிறுவனத்தில் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கு பத்துமாணவர்களுக்கும் புதுடில்லியில் உள்ள நேரு அரசங்க ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியில் கற்பதற்கு ஐந்து மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது.

க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் பௌதீகவியல், உயிரியல், இரசாயன வியல் ஆகிய பாடங்களில் 50 சதவீதத்திற்கும் அதிகமான புள்ளிகளை பெற்று சித்தியடைந்துள்ள 22 வயதுக்குட்பட்ட மாணவர்கள் இதற்காக விண்ணப்பிக்க முடியும் என்று சுதேசிய வைத்திய துணை அமைச்சு தெரிவித்துள்ளது.

மொத்தப்புள்ளிகளின் அடிப்படையில் தகுதியான மாணவர்கள் தெரிவு செய்யப்படவுள்ளார்கள். விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களை மேமாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் கொழும்பு- 2 யூனியன் பிளேஸ் இலக்கம் 330இல் அமைந்துள்ள சுதேச வைத்திய துறை அமைச்சுக்கு அனுப்பிவைக் குமாறு அமைச்சின் செயலாளர் கேட்டுள் ளார். (சு-9)

## விண்ணப்பம் கோரல்

(துன்னாலை)

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட இரண்டு பாடசாலைகளுக்கு அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ளதாகவும் பொருத்தமானவர்கள் அப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம் என்றும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜா அறிவித்துள்ளார்.

யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தின் அதிபர் பதவிக்கு இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவராக அல்லது இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 1அல்லது வகுப்பு2 தரம் 1 இனைச் சேர்ந்த வராக இருக்க வேண்டுமெனவும் பொருத்த முடையோர் விண்ணப் பத்தினை சுயமாக தாயாரித்து இம்மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் வடமராட்சி வலயக் கல்விப் பணிமனைக்கு அனுப்பிவைக்குமாறும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். மேலும் யா/ வதிரி திரு இருதயக் கல்லூரி அதிபர் பதவிக்கு அதி பர் தரம்1 அல்லது 2:1 அல்லது ஆசிரியர் தரம் 1 இனைச் சேர்ந்தவராக இருக்க வேண்டுமெனவும் பொருத்த முடையோர் விண்ணபத்திணை சுயமாக தாயரித்து எதிர்வரும்15 ஆம் திகதிக் முன்னர் வடமராட்சி வலயக் கல்விப் பணிமனைக்கு அனுப்பிவைக்குமாறு ம் அவர் மேலும் அறிவித்துள்ளார். (சு-101)

## வாகனம் அன்பளிப்பு




சிறுவர் பாதுகாப்பு இலங்கை, கோண்டாவில் சிவபூமி சிறுவர் மன வளர்ச்சி பாடசாலையில் கல்வி கற்கும் 89 மாணவர்களில் 16 பேருக்கு போக்குவரத்து வசதி அளிப்பதற்காக 17 இலட்சத்து 30 ஆயிரம் ரூபா பெறுமதியான ஹயஸ்வாகனம் ஒன்றை கடந்த மாதம் 25ஆம் திகதி செவ்வாய்க் கிழமை வழங்கியுள்ளது.

இந்நிகழ்வில் சிறுவர் பாதுகாப்பு மாவட்ட முகவர் திருமதி ஞானச் செல்வி சிங்கேஸ்வரன், சிவபூமி சிறுவர் மன வளர்ச்சி பாடசாலை உப தலைவர் டாக்டர் திருமதி குகதாசன், பங்காளிகள் அபிவிருத்தி முகவர் க.மகேந்திரன் ஆகியோர் கலந்து கொண்ட னர்.

மேற்படி வாகனத்தின் சாவி மேற்படி பாடசாலை சிறுவர் ஒருவனிடம் கைய ளிக்கப்பட்டது. (து)



ஈச்சமோட்டை விளையாட்டுக்கழக மைதானத்தில் யாழ் .பிரதேச செயலக அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்டுவந்த மென்பந்துப்போட்டியின் இறுதி ஆட்டம் ஜெறலைனேர்ஸ் விளையாட்டுக்கழகத்திற்கும் பாடும் மீன் விளையாட்டு கழகத்திற்குமிடையில் அண்மையில் நடைபெற்ற போது அதில் முதன்மை விருந்தினராக கலந்துகொண்ட கப்ரின் டி.ஏ.எம். குணசிங்கம் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட கிராமசேவையாளர் கே. சுந்தர லிங்கம் , விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.ரமணன் ஆகியோருக்கு விளையாட்டு வீரர்களை அறிமுகம் செய்து வைக்கிறார்.

> சமாதானத்திற்காக சண்டை பிறப்பிக்காமல் சண்டைக்காக சமாதானத்தை பிறப்பிக்கும் மனிதன் புத்திசாலி அல்ல.
>
> -பிளேட்டோ

வலம்புரி

## சமாதானத்தை வலியுறுத்த மக்கள் முன் வரவேண்டும்

நாடு பூராகவும் கொலைச் சம்பவங்களும் திகில் சம்பவங்களும் நடந்த வண்ணம் உள்ளன.

எங்கு பார்த்தாலும் அவலச் செய்திகள் - இறைவா! ஏன் இப்படி ? இதைத் தடுத்து நிறுத்துவார் யாரேனும் இல்லையா? இது சாமானிய மக்களின் மனக்குமுறல்.

யுத்தமும் அதற்கு முன்னதான வன்முறைச் சம்பவங்களும் ஏழை மக்களையே பாதிக்கின்றன.

நேற்று முன்தினம் இரவு உதயன் பத்திரிகை அலுவலகம்மீது நடாத்தப்பட்ட தாக்குதலில் இரண்டு பணியாளர்கள் இறந்து போனார்கள்.

இதில் ஒருவர் பத்திரிகை விநியோக முகாமையாளர். மற்றையவர் பத்திரிகை மடிப்பிலும் விநியோகத்திலும் ஈடுபடுபவர்.

இவர்களின் மரணத்தால் இவர்களின் குடும்பங்கள் பேரிழப்பைச் சந்தித்துள்ளன.

நித்திரை விழித்தும் பத்திரிகை மடித்தும் தனது வாழ்வியலின் தேவைக்காக உழைப்பில் ஈடுபட்ட இருவர் இறந்துபோனார்களே என்ற துன்பியலை ஒரு கணம் சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

இது தான் தமிழர்களின் நிலையா? பணிக்குச் சென்றவர் வீடு திரும்புவார் என்ற உத்தரவாதம் இல்லாத வாழ்க்கையில் ஏதேனும் மகிழ்வும் மன நிம்மதியும் இருக்க முடியாது.

எனவே நிம்மதியும் சுதந்திரமும் கூடிய சமாதானம் ஏற்படுவதற்காக நாம் அனைவரும் பாடுபடவேண்டும்.

குறிப்பாக தென்னிலங்கை மக்கள் சமாதானத்தை வலியுறுத்தி குரல் கொடுப்பது மிகவும் அவசியமானதாகும்.

மேலும் இத்தகைய கொலைகள் திகில் சம்பவங்கள் இடம்பெறுவதைத் தடுப்பதில் மதத் தலைவர்களும் புத்தி ஜீவிகளும் முன்வரவேண்டும்.

அட்டூழியங்களும் அநியாயங்களும் இடம் பெறும்போது அதனைப்பார்த்துக் கொண்டிருப்பது பெரும் பழிக்குரியது.

அதிலும் குரல் கொடுக்கவல்லவர்கள் அறிஞர்கள் ,மதத்தலைவர்கள் மௌனம் சாதிப்பார்களாயின் அதுவே உலகின் மிகப்பெரும் கொடூரமாக இருக்கும்.

ஏழை மக்களையும் அறியாமையில் வாடுபவர்களையும் பாதுகாக்கும் பொறுப்பு அறிஞர்களுடையதும் அரசியல்வாதிகளினுடையதுமாகும்.

இதில் இருந்து யாரேனும் விலக முடியாது. அவ்வாறு விலகினால் அதன் பாவத்திரட்சியை பின்நாளில் யாராலும் அடக்கமுடியாது போகும்.

# பிரபாகரன் ஒரு யதார்த்தவாதி இந்திய இராணுவத் தளபதி கல்கட்

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் ஒரு யதார்த் தவாதி என்று முன்னாள் இந்திய இராணுவத்தளபதி லெப் ஜனரல் ஏ.எஸ்.கல்கட் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இந்திய அமை திப்படை இருந்தகாலத்தில் அதற் குப் பொறுப்பானவராகச் செயற் பட்டகல்கட் இலங்கைப் பிரச்சினை தொடர்பாக ஆங்கில இணையத் தளம் ஒன்றுக்கு அளித்த நேர் காணலிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். நேர்காணலில் அவர் மேலும் தெரிவித்தாவது,

இலங்கை இனப்பிச்சினையில் நோர்வே அனுசரணையா ளர்கள் சிறப்பாகச் செயற்படுகின் றனர். இரு தரப்பிலும் சில முன் னேற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இலங்கைஅமைதி முயற்சிகளில் இந்தியா பங்கேற்க வேண்டிய தேவை இல்லை சர்வதேச சமூகம் அங்கே ஒரு புதிய சக்தியை அறிமுகம் செய்துள்ளது.

1980ஆம் ஆண்டுகளில் இந் திய அமைதிப்படை இலங்கைக் குச் சென்றதற்குப் பின்னர் சர்வ தேச நிலைகளில் நிறைய மாற் றங்கள் ஏற்பட்டுள்ளன. அரசியல் மற் றும் பொருண்மியத்துறை களில் இந்தியா ஒரு முக்கிய சக்தியாக உருவெடுத்துள்ளது.

இதர முக்கிய சக்திகளான அமெ ரிக்கா போன்றவை சர்வதேச நிலையில் இந்தியாவின் முக்கி யத்துவத்தை அங்கீகரிக்கின்றன சர்வதேச அரசியல் நிலைத்தன் மைக்கு இந்தியா பங்களிக்க வேண்டும் என்றும் அவர்கள் எதிர் பார்க்கின்றனர். ஆகையால் சர்வ தேச விவகாரங்களில் இதர சக்தி களின்எதிர்பார்ப்புக்களுக்குஅமைய செயற்பட வேண்டிய மேலதிக பொறுப்பு இந்தியாவுக்கு உள்ளது.

பேச்சுக்களின் அடிப்படை அம் சங்களை இரு தரப்பினரும் அங்கீ கரித்துள்ளனர். இலங்கைத் தமிழர் களது சட்டபூர்வ உரிமைகளையும் சிறிலங்காவின் இறையாண்மை மற்றும் பிரதேச ஒற்றுமையையும் 1987ஆம் ஆண்டு இந்தியா சிறிலங்காஒப்பந்தம்உறுதிசெய்திருந் தது.

தற்போது எது செய்தாலும் இந்த சட்டப்பூர்வ உரிமை மற்றும் இறையாண்மை, பிரதேசஒற்றுமை ஆகியவைகளைக் கொண்டே உரு வாக்கப்பட வேண்டியதிருக்கும். சிங் களத் தலைவர்களைப்பொறுத்தவ ரையில்நெகிழ்வுப்போக்கைக்கடைபிடிக்கின்றனர். தேர்தலின் போது கடும் போக்கைக் கடைபிடித்த மஹிந்தராஜபக்ஷஅமைதிமுயற்சி களினூடே தள்ளப்பட்டுள்ளார். அனைத்துக் கட்சிகளும் அமைதி முயற்சிகளில் ஒட்டுமொத்த ஈடு பாட்டைவெளிப் படுத்துகின்றனர்.

பிரபாகரன் ஒரு யதார்த்தவாதி இலங்கைத் தமிழர் தரப்புப் பேச்சுக் குழுவினர் பிரபாகரனுடன் தான் ஆலோசனை நடத்துகின்றனர். ஆனால் இதேபோன்று அரசாங் கப் பேச்சாளர்களும்செயற்படவேண்டும் அது ஒரு உத்தியாக இருக்கும்.

இலங்கையில் ஆயுதவழியில் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடி யாது. இலங்கைத் தமிழர்களை சிறிலங்கா அரசாங்கத்தால் யுத் தத்தில் வெல்ல முடியாது அதே போல் சிறிலங்காவுக்கு எதிராக வெற்றியைப் பெற்றுவிட முடியாது என்பதில் விடுதலைப் புலிகளும் அவதானமாக உள்ளனர் அங்குஅமைதிமுயற்சிகளைத் தவிர வேறு வழியில்லை என்றார்.

(க)

# ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அலரிமாளிகையிலும் பாதுகாப்பு இல்லை

(கொழும்பு)

அலரி மாளிகையில் அவருக் குப் பாதுகாப்பு இல்லை என்று மஹிந்தவின் பாதுகாப்பு அதி காரிகள் அச்சமடைந் துள்ளனர் என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும், பாது காப்பு புலனாய்வுப் பிரிவின் அறிக் கையை கவனத்தில் எடுத்து மஹிந்த ராஜபக்ஷவின் பயணங்கள் மற் றும் கூட்டங்களை இயலுமான வகையில் கட்டுப்படுத்துவதற்கு மஹிந்தவின் பாதுகாப்புப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ முக்கிய இலக்காக இருப்பதால் இந்த நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவரதுபாதுகாப்புப்பிரிவின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். தற்போது மஹிந்த தங்கியிருக்கும் அலரிமாளிகையும் மஹிந் தவின் பாதுகாப்பிற்கு ஏற்ற சூழ லில் அமையவில்லை என்று அந்த அதிகாரி கூறியுள்ளார். அதனால் இம்மாத இறுதிக்குள் மஹிந்தவை ஜனாதிபதி மாளிகைக்கு அழைத் துச்செல்ல நடவடிக்கை எடுக்கப் படும் என்றும் அந்த அதிகாரி தெரி வித்துள்ளார் என்று குறிப்பிடப்பட் டுள்ளது.

இதனிடையே எதிர்வரும் திங் கட்கிழமை முதல் மஹிந்த ராஜ பக்ஷ அலரி மாளிகையிலிருந்து வெளியேறுவார் என்றும் கூறப்படுகிறது. அத்துடன் மஹிந்தவின் அலரி மாளிகையில் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தங் கக்கூடும் என்றும்தெரிகிறது. (க-7)

# அவதியுறும் கொழும்பு தமிழர்கள்

கொழும்பில் வதியும் தமிழ் மக்களின் இருப்புத் தற்போது கேள்விக் குறியாகி வருகின்றது. கொழும்பில் சிங்களத் தரப்புக்கு ஏதாவது அசம்பாவிதங்கள்நடை பெற்றால்அதற்குஎதிரானபழிவாங்கலாகத் தமிழர்கள் மீது சிங்கள அரச பயங்கரவாதம் தமது அரா ஜகத்தைக் கட்டவிழ்த்து விடுகின் றன.

இது இன்று நேற்றல்ல தொடர் கதையாகி வரும் ஒரு நிகழ்வாக நடைபெறுகின்றது. மனித நாகரீ கத்துக்கு அப்பாற்பட்டு தமிழர்களின் தலைகள் துண்டிக்கப்பட்டு நிர் வான நிலையில் நடுத்தெருவில் தூக்கி எறியும் நிலை ஏற்பட் டுள்ளது.

தமிழ் மக்களின் நெஞ்சை கொதிப்படையச் செய்யும் சம்பவம் மட்டுமன்றி கைது, காணாமல் போகும் சம்பவங்களும் அதிகரித்துள்ளன. அண்மையில் இராணுவத் தளபதியை இலக்கு வைத்துநடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத்தாக்குதலையடுத்து அரச படைகள் திருமலை மாவட்டம் மூதூர் கிழக் குப் பகுதியில் பொது மக்கள் மீது முப்படைகளும் தாக் குதல் நடத்தியதுடன் தமிழ் மக்கள் படுகொலைசெய்யப்பட்ட சம்பவம் ஒரு புறமிருக்க கொழும்பில் பல நூற்றுக்கணக்கான தமிழர் கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்கள் வதை முகாம்களில் வைத்து சித்திரவதைப்படுத்தப்படுகின் றனர் எனத் தெரிய வருகின்றது.

தமிழினம் சிங்களப் பெரும் பான்மையினத்துடன் ஒரு போதும் இணைந்து வாழ முடியாது என் பதைத்தான் கொழும்புத் தமிழர் களுக்கு எதிராக மேற்கொள்ளப் பட்டுள்ள வன்முறைகள் எடுத்துக் காட்டுகின்றன.


ஒட்டுமொத்தத் தமிழ் மக்களை யும் அழித்தொழிப்பதற்கான இன அழிப்பு நடவடிக்கைதான் சிங்கள இனவாத அரசுகள் மேற் கொண்டுவருகின்றன. முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ் மன் கதிர்காமர் சுட்டுக்கொல்லப் பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து பல நூற்றுக்கணக்கான தமிழர்கள் படையினரால்கைதுசெய்யப் பட்டனர். பலர் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதைப்படுத்தப்பட் டனர்.

அதே போன்றதொரு நிலைமை தான் இராணுவ தளபதி மீதான தாக்குதல் சம்பவத்தின் பின்ன ரும் எதிரொலித்தது. எதிர்காலங் களிலும் படையினர் இவ்வாறான வன்முறைகளில் ஈடுபடமாட்டார் கள் என்பதற்கு எவ்வித உத்தர வாதமுமில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

## பட்டதாரிகளுக்கு பயிற்சிவழங்க 500 இலட்சம் ரூபா ஒதுக்கீடு!

பட்டதாரி இளைஞர் யுவதிக ளுக்காக அரம்பிக்கப்பட்டுள்ள 'தருண அருண' பயிற்சி வழங் கும் திட்டத்தின் மூன்றாம் கட்ட செயற்திட்டத்திற்கு அரசாங்கம் இவ்வருடம் 500 இலட்சம் ரூபா ஒதுக்கியுள்ளதாக நிபுணத்துவ அபிவிருத்தி மற்றும் அரச முயற் சிகள் மறு சீரமைப்பு அமைச்சர் ஸ்ரீபதி சூரியாராச்சி தெரிவித்தார்.

மஹிந்த சிந்தனைக் கோட் பாட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கும் 'தருண அருண' பயிற்சித் திட்டத் தின் மூன்றாம் கட்டப் பூர்த்தியை யிட்டு ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கையில் ஸ்ரீபதி சூரி யாராச்சி மேற்கண்டவாறு தெரிவித்தார். பட்டதாரிகள் பயிற்சித் திட்டத் தின் மூன்றாம் கட்ட நிகழ்ச்சி நிர லுக்கு இதுவரை ஆறாயிரம் பட் டதாரிகள் பதிவு செய்து கொண் டுள்ளதாகவும், நாடு முழுவது முள்ள 40 பயிற்சி நிலையங்க ளினூடாக இவர்களுக்குப் பயிற்சி யளிக்கப்படவிருப்பதாகவும் அமைச் சர் மேலும் தெரிவித்தார். (க-7)



## சாயி அருளமுதம்

வரண்ட பாலைவனம் போலிருக்கும் இதயங்களின் அன்பின் விதைகளைத் தூவுங்கள். அப்பொழுது அவற்றில் இருந்து பிறக்கும் அன்பு முளைகள் மகிழ்ச்சியினால் அந்த வெற்றுப் பிரதேசத்தை பசுமையாக்கி விடும்.

அன்பின் மலர்வு பவனத்தை சுகந்தமயமாக்கும். அன்பெனும் ஆறு பள்ளத்தாக்குகளில் ரீங்காரம் செய்து கொண்டு பாயும். ஒவ்வொரு பட்சியும் மிருகமும் குழந்தையும் அன்பின் கீதத்தை இசைக்கும்.

நாளாந்த நற்சிந்தனை

# அரசபடைகள் வெளியேறுவதே தமிழ் மக்களுக்கு பாதுகாப்பானது

## தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அறிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் நேற்று முன்தினம் உதயன் காரியாலயத்தின் மீது கோழைத்தனமான தாக்குதல் நடைபெற்றமை தொடர்பாகவும் வட–கிழக்கில் தமிழ்மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் அச்சுறுத்தல்கள் தொடர்பாகவும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு பாராளுமன்றக்குழு நேற்றுக்கூடி ஆராய்ந்தது.

இது தொடர்பில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு விடுத்த செய்திக்குறிப்பில்,

தொடரும் இத்தகைய அச்சுறுத்தல் நடவடிக்கைகள் தமிழ்த்தேசியப் போராட்டத்தில் இருந்து மக்களை அந்நியப்படுத்தும் நோக்கத்தை கொண்டிருந்தாலும் இந்த நோக்கம் ஒருபோதும் நிறைவேறப்போவதில்லை என்பதை தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு சுட்டிக் காட்ட விரும்புகின்றது.

மேலும் இதற்கு மாறாக இத்தகைய அச்சுறுத்தல் நடவடிக்கைகள் தமிழ் மக்கள் மத்தியில் விடுதலை உணர்வினை மேலும் வலுப்படுத்துவதாகவே அமையும்.

அரச நிர்வாகத்தினதும் அரச படைகளினதும் அதன் துணைப்படைகளினதும் இத்தகைய நடவடிக்கைகள் தமிழ்த்தேசத்தை – ஆக்கிரமிக்கும் நடவடிக்கைகளை மீண்டும் ஒரு முறை நிரூபிப்பதாகவே அமைகிறது.

இதன் காரணமாக தமிழ் மக்கள் ,அரச நிர்வாகம் அரச படைகள் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்தும் என்ற நம்பிக்கையை முற்றாக இழந்து தமிழினத்தின் பாதுகாப்பை உறுதி செய்ய அரச படைகளும் துணைப் படைகளும் வட–கிழக்கில் இருந்து வெளியேறுவதே ஒரே தீர்வாகும் என்ற நிலைப்பாட்டிற்கே வந்துள்ளார்கள்.தமிழ் ஊடகத்துறை மீது நடாத்தப்பட்டிருக்கும் இந்தக் கோழைத்தனமான காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிக்கிறது.

அதேவேளை இச் சம்பவத்தில் மரணமடைந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு காயமடைந்தவர்கள் கூடிய விரைவில் நலம் அடையப் பிரார்த்திக்கின்றோம். இவ்வாறு அந்த அறிக்கையில்தெரிவிக்கப்பட்டுள்ளது.(ந)

## யாழ்.அரச அதிபரின் அனுதாபச்செய்தி

உதயன் பத்திரிகை அலுவலகத்தில் கடமையாற்றிய பஸ்ரியன் ஜோர்ச் சகாயதாஸ் (சுரேஷ் வயது37), இராஜரட்ணம் ரஞ்சித் (வயது 25) ஆகிய இருவர் கொல்லப்பட்டதுடன், எஸ் உதயகுமார்,என்.தயாகரன் ஆகிய இரு அலுவலர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

நிராயுதபாணிகளான இவர்களை தாக்கியமை மிகவும் கவலைப்படவேண்டிய விடயமாகும்.இவ்வாறு யாழ்.அரச அதிபர் கே. கணேஷ் விடுத்த அநுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேற்படி சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களது குடும்பத்திற்கும் அவர்களது உறவினர்களிற்கும் உதயன் பத்திரிகை நிறுவனத்திற்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவது மிகவும் வருந்தத்தக்க ஒன்றாகும் என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## பருத்தித்துறை மாணவர்களிடம் இருந்து
## மீட்கப்பட்ட பொருட்கள் இரசாயனப் பகுப்பாய்விற்கு

(துன்னாலை)

பருத்தித்துறையில் கைதான மாணவர்கள் இருவரினதும் வீட்டில் வைத்து இராணுவத்தால் மீட்கப்பட்டதாக கூறப்படும் துப்பாக்கியும்,வெடிபொருட்களும் பொலிஸாரால் பருத்தித்துறை நீதிமன்றில் நேற்று சம்ர்ப்பிக்கப்பட்டன.

ரி.56 ரகத் துப்பாக்கி ஒன்றும் அதற்கான 50 மேற்பட்ட ரவைகள் ,மின்சார வயர்கள் மற்றும் சுற்றிவைக்கப்பட்டதாக கூறப்படும் படுக்கை விரிப்புகள், இராணுவம் பயன்படுத்தும் குறிப்புப் புத்தகக்கவர், பொலிஸாரின் இலக்கத்தகடு ஒன்று, டெட் கோட் எனப்படும் சக்தி வாய்ந்த வயர் போன்ற பொருட்களே நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டன.

இவற்றை பார்வையிட்ட பருத்தித்துறை நீதிபதி க.அரியநாயகம்அவற்றை இரசாயனப் பகுப்பாய்விற்கு அனுப்பிவைக்க உத்தர விட்டார்.

அத்துடன் கைதுசெய்து விளக்கமறியலில் வைத்திருந்த மாணவர்களான கிருஷ்ணராசா திவாகர் ,கணேசலிங்கம் விஜயகாந் மற்றும் திவாகரின் தந்தையான செல்வராசா கிருஷ்ணராசா ஆகிய மூவரையும் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைத்திருக்கவும் உத்தரவிட்டார்.

மேற்படி இரு மாணவர்களும் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியில் உயர்தர வகுப்பில் கல்வி கற்பவர்கள் எனவும் தற்போது நடைபெறவுள்ள உயர்தரப்பரீட்சைக்கு தேற்றவுள்ளனர் எனவும் தெரிய வருகின்றது.(ந–10)

## உதயன் மீதான தாக்குதல் பொதுஅமைப்புகள் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

உதயன் பணிமனையில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தைக் கண்டித்து யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் , சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை, தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக் கழகம், யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் ,யாழ்.மாவட்ட உயர் கல்வி நிறுவனங்களின் மாணவர் அமையம் ,யாழ். பல்கலைக்கழக மனித உரிமைகளுக்கான ஆசிரியர்கள், யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், புதிய ஜனநாயகக்கட்சி மற்றும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் கண்டன அறிக்கைகளையும் கவலையையும் வெளியிட்டுள்ளனர்.(து)

### உதயன் பணிமனைத் தாக்குதல்
## கைதான ஆறு பேரும் பிணையில் செல்ல அனுமதி

உதயன் பணிமனையின் மீது நேற்று முன்தினம் நடத்தப்பட்ட தாக்குதலையடுத்து சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட 4 மாணவர்களான,

கணபதிப்பிள்ளை வசீகரன் (திருகோணமலை புனித ஜோசப் கல்லூரி),அருள் கிருஷாந்த் (திருகோணமலை புனித ஜோசப் கல்லூரி),யோகநாதன் துசான் தஜித் (மட்டக்களப்பு புனித மைக்கேல்கல்லூரி), மோகனதாஸ் அனுசாகரன் (மட்டக்களப்பு புனித மைக்கேல்கல்லூரி), உள்ளிட்ட ஆறு பேரையும் யாழ்.மாவட்ட மேலதிக நீதிபதி சிறிநிதி நந்தசேகரனினால் பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டது.

(ந–05)

### புலிகளுக்கு...

பெற்றுக்கொடுப்பதற்காகவே நோர்வேக்காரர்கள் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.கடல், விமான வசதியை புலிகளுக்கு வழங்கும் நோர்வேயின் முயற்சிக்கு அரசாங்கம் அனுசரணை புரிவது வேடிக்கையாகவுள்ளது. இதனை அரசாங்கம் கைவிட வேண்டும். இல்லாவிட்டால் அரசுக்கு எதிராகவும் போராட்டங்களை நடத்தவேண்டிய சூழ் நிலை உருவாகும் என்றும் கலாநிதிகுணதாச அமரசேகர தெரிவித்துள்ளார். (ந–5)

### பேச்சுக்கு...

இருக்க அரசையும் விடுதலைப்புலிகளையும் ஜெனீவாவில் சந்திக்க வைப்பதில் மதத் தலைவர்கள் சிலர் இரு தரப்புடனும் தொடர்பு கொண்டுள்ளதாகவும், ஜெனீவாப் பேச்சுவார்த்தை மிக விரைவில் நடைபெறுவதற்கான கள நிலை ஏற்பட்டுள்ள தாகவும் தெரிய வருகின்றது. (ந)

### உதயன்...

பெர்னாண்டோ தெரிவித்தார்.இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கான விசாரணைக்குழுவிற்கு பிரதிப்பொலிஸ்மா அதிபர் அசோக விஜயத்தில தலைமை தாங்குவதாகவும் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். (ந–5)


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 11. 11. 1975

மறைவு 16. 04. 2005

செல்வி வசந்தமாலா சொர்ணலிங்கம் (வசந்தி)

திதி–04.05.2006

அன்பின் திருவுருவே! பாசத்தின் பிறப்பிடமே!
எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து
எம்மையெல்லாம் ஆறாத்துயரில் விட்டுவிட்டு
மீளாத் துயில் கொண்ட அன்புச் செல்வமே!!
எத்தனையோ உறவுகள் இருந்தாலும் வசந்தி என்றழைக்க
இன்று உன் உயிர் இல்லையம்மா!

ஓராண்டல்ல எத்தனை ஆண்டுகள் கழிந்தாலும்
உன் நினைவு எம் நெஞ்சை விட்டகலாது

"கதிர்காமவசந்தம்"
இணுவில் கிழக்கு
இணுவில்

உன்பிரிவால்
துயருறும்
அம்மா,சகோதரர்கள்
உறவினர்கள்

(417)



நிறைஞ்சனாலய

சத்தியராஜ், ரோஜா நடித்த

எங்கிருந்தோ வந்தான்

சங்கானை கா.நே: 10.30, 2.15, 5.30 ,8.45



நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

04.05.2006 முதல்

10.30,2.30,6.30,9.30

மாமனிதக் குரங்கொன்றின் நெஞ்சை உருக்கும் கதை கொண்ட சாகசச் சித்திரம்

பீட்டர் ஜேக்சான்

கிங்கொங் (KING KONG)

தங்கத்தமிழ் மொழியில். பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 04.05.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.